308

Book No. 1.

# Ladies Liberty

By

*Gonjeeveram - Vasudeva Aiyer*
2 - 13, Adam Street, Mylapore.

1918.

Y15
N18
18350

...ed] [Price As, 6.

உ

# மெல்லியலார் சுதந்திரம்.

காஞ்சிபுரம் - வாசுதேவ ஐயர்

எழுதியது.

சென்னை
கோமளேசுவரன்பேட்டை
சச்சிதாநந்த அச்சியந்திரசாலை.
1918.

காப்பிரயிட்] [விலை அணா 6.

உ

சண்முகநாதன் றுணை.

# நூன் முகம்.

"ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே"

என்னும் இலக்கண நூற்படி இப்பெயரிய நூற்கு மொரு பாயிர முரைக்கலாயிற்று. இவ்வரிய வியாசத்தை 1914-ம் வருஷத்தில் சென்னை "ஹிந்து நேசன்" என்னும் பத்திரிகையில் சுருக்கி வெளியிட்டனம். இப்போது சில புனைந்துரைகள் புகுத்தி வாசிப்போர்க்கு இன்பம் பயக்கும் வண்ணம் புத்தகரூபமாய் வெளியிடலாயினம். இஃது எளிதாய லளித மொழிகளால் தொடுக்கப்பெற்ற பெருமையிற் சிறந்தது; சுருங்கியசொற்களிலே விரிந்த பொருள் காட்டுந்தன்மையது; இதிலடங்கிய சங்கதிகள் யாவும் இக்காலத்திலுள்ளவைகள் தாம்; இதற்கிப் பெயர் சூட்டினும் மெய்ப்பொருள் காட்டுந்தன்மையது; ஆசாரமாகிய சீரைத் திருத்தும் ∴ அநாசாரருக்கு வாயாப்புப் போன்றது; அளவிறந்த நியாயங்கள் பொதியப்பெற்ற பொற்பினைத் தன்னகத்தின்கண் கொண்டது. ஆதலால் சொற் குற்றம், வாக்கிய வழூஉ முதலியவைக ளுளவாயின் அடியேமை மன்னித்து நீர்பிரித் தன்னமுண்ணுந் தூய தீம் பால்போற் குணத்தைமாத்திரம் கொள்க.

"வஞ்ச நெஞ்சனை மாச முக்கனைப்
பாவி யைவழக் கில்லியைப்
பஞ்ச துட்டனைச் சாது வேயென்று
பாடி னுங்கொடுப் பாரிலை
பொன்செய் செஞ்சடைப் புண்ணி யன்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்!
நெஞ்சி னேயறுத் துஞ்சு போவதற்
கியாது மையுற வில்லையே"

எனச் சுந்தரமூர்த்தி நாயனார் திருப்புகலூர்த் திருப்பதிகத்தில் திருவாய்மலர்ந்தருளிய வண்ணம் மானிடன் எத்துணை மாட்சியினை யுடையவனாயினும், அவனைப்பாடுவதும், அவனுக்கொரு நூலை அர்ப்பணஞ் செய்வதும், பல தீமைபயக்கு மாகலான் அத்தகைய தீச்செயலை முற்றத்துறந்த அடியேம் இந்நூலை எல்லாம் வல்ல இறைவனும் கலியுக வரதனும் கமலக்கண்ணன் மருகனுமாகிய கந்தப்பெருமான் மலரடியில் சமர்ப்பிக்கின்றனம். ஓம் சுபம்.

காஞ்சிபுரம் - வாசுதேவன்.

உ

சண்முகநாதன் றுணை.

# மெல்லியலார் சுதந்திரம்.

மெல்லிய தன்மையராதலின், பெண்கள், மெல்லியலார் எனப்படுவர். என்னை? ஊண், நடை, உடை, சொல், சரீரம்யாவும் மென்மையா யிருத்தலின். இத்தகைய மென்மையைப் பெற்ற பெண்கட்குத் தக்க உரிமையினையும்,

"வாரிமணி வெய்யோன் மதிபா ரதம்வள்ளல்
சீரியல நம்வளர்க்குஞ் செய்கைதான்—நாரிகேள்
* பேதை முதலாகப் பேரிளம்பெண் ணீறாக
வீதெழுவர் தம்பருவ மெண்"

எனப் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் முதலிய ஏழு பருவத்தினையும் பகுத்துக் காட்டினர் பரதகண்டத்திலிருந்த பெரியோர். இவற்றுள் பேதை, பெதும்பைப் பருவங்களில் பிதாவின் பார்வையிலும், ஏனைய பருவங்களில் கணவன் பார்வையிலும், கணவனில்வழி மகன் அல்லது சுற்றத்தாரின் பார்வையிலும் இருத்தல் வேண்டுமேயொழிய, தனித்திருக்கலாகாதென வலியுறுத்துவராயினர். இக்கருத்தையே தான்,

"மங்கையை இளமை தன்னில் வளமுறு பிதாவே காப்பன்
பொங்கிய யௌவ னத்திற் பொருந்துபத் தாவே காப்பன்

---

* பருவங்கள்:—5-7; 8-11; 12-13; 14-19; 20-25; 26-31; 32-40;

*தங்கிய மூப்பில் தங்கள் தனையரே காப்ப ரன்றிச்*
*சங்கையா மொருகா லத்துஞ் சுதந்தர மில்லை தானே"*

என்று நீதிசாரமும் அறைகின்றது. அல்லாமலும், விலைமகள், அடங்காமாரி, படுநீலி, கலகக்காரி, இருமனப் பெண்டிர் முதலிய துர்மாதர்களோடு இணக்கங் கொள்வதும், "நடை குலுக்கி முகமினுக்கி நகை நகைத்து" நடப்பதும், ஆடவர்மத்தியில் அடக்கமின்றி அகங்கரித்துப் பேசுவதும் உத்தமப் பெண்டிர்க்குக் கூடாவென வரையறுத்தனர். இவற்றை மேனோக்காகக் கண்ணுற்ற நவீன நாகரிகப்பித்தேறியோர், ஹிந்துக்கள் தங்கள் பெண்களை விலங்கினுங் கேடாய்ப் பாவித்து நடத்துகின்றனரென இல்லாத காரணத்தைக்காட்டிக் குதர்க்க பூஷணத்தை மேற்கொள்வாராயினர். பின்னும் குதர்க்கிகள் தங்கள்பெண்களை அவிழ்த்துவிட்ட எருதுபோல் வெளியே சுதந்திரமாய்விட அவர்களும் தடிகட்டா எருதுபோல் திறந்த வீடெல்லாம் நுழையவும், ஆடவர் முன்கைலாகு கொடுத்துப் பேசவும், விருப்புற்ற இடங்கட்குச்சென்று விருப்புற்ற வண்ணஞ் செய்யவும் மேற்கொள்கின்றார்கள். இன்னும் "காவறுனே பாவையர்க் கழகு" என்னும் மூதாட்டியார் முதுமொழியை உணராது இங்கிலீஷ் படித்து விட்டுத் தலையில் இறைகூடையைக் கவிழ்த்துக் கொண்டிருக்கும் பெரியோர் தங்கள் தங்கள் மாதர்களை நன்றாய் அலங்கரித்துக் கையிற் பிடித்துக்கொண்டு தெருத் தெருவாய்ச் சுற்றித்திரிவதும், பலவிதமான பகட்டுடைகளை யணிந்துகொண்டு துணையொன்றுமின்றிச் சாலையினூடேசெல்லவிடுவதும், இஃதன்றி முகத்தில் பூசி ஸ்நானஞ் செய்து

வந்த * மஞ்சளை யகற்றி வெண்மைப் பொடியைப் பூசச் செய்வதும், அளகபாரத்தில் அழகுற முடித்து வந்த சுகந்த மலர்களையகற்றிக் கடிதப் பூக்களையும் துணியால் செய்த பூக்களையும் முடிக்குமாறு செய்வதும் எவ்வளவு அநாகரிகமான செயல்கள். என்னே? ஸ்வதந்தரம்! என்னே? அறியாமை!! அந்தோ! அந்தோ!! நமது பெண்மணிகட்கு முதியோர் அளித்துள்ள அருமையும் பெருமையும் வாய்ந்த தன்மையினை யுள்ளத்தின்கண் கொண்டு ஆராய்ந்துணர்ந்தனரா இவர்? உணர்ந்தாரேல் இவ்வாறு மதிமருண்டுழல்வார்களா? ஸஹோதரர்களே! செல்வவந்தர்களே! கவனமா யுற்றுக்கேண்மின்! ஸ்திரீ, வீட்டினுரிமை முழுவதையும் ஏற்பவளாகின்றபடியால் "இல்லாள்" என்னும் பெயரினை யடைகின்றனள். கணவன் ஈட்டிய செல்வம் மனையாட்டிக்கே யுரியது. பழைய சிநேகத்தைக் குறித்து வந்தாரும், அது குறியாது வந்தாருமாகிய இருவகை விருந்தினர், உறவினர் முதலியோரை உபசரித்தல் மனையாட்டிக்கே தலையாய கடமை.

"கணவனுக் கினியளாய் மிருதுபா ஷியாய் மிக்க
கமலநிக ரூப வதியாய்க்
காய்சின மிலாளுமாய் நோய்பழி யிலாததோர்
கால்வழியில் வந்த வளுமாய்
மணமிக்க நாணமட மச்சம்ப யிர்ப்பென்ன
வருமினிய மார்க்க வதியாய்
மாமிமா ருக்கிதஞ் செய்பவளு மாய்வாசல்
வருவிருந் தோம்பு பவளாய்

---

* மஞ்சள் பொன்னிற மேனியையும் புலால் நாற்றத்தையும், முகசாட்டியத்தையும், நாசிகாரோகத்தையும், தோலைப்பற்றிய சகல வியாதிகளையும் நிவிர்த்திக்கத்தக்கது. புருஷ வசியமும் உண்டாக்கும்.

இணையின்மகிழ் நன்சொல்வழி நிற்பவளு மாய்ப்பிறர்த
  மில்வழி செலாத வளுமாய்
அணியிழை யொருத்தியுண் டாயினவள் கற்புடைய
  ளாகுமெம தருமை மதவேள்
அறுதினமு மனதினினை தருசதுர கிரிவள
  ரறப்ப ளீசுரதேவனே"

"கொண்டான் குறிப்பொழுகல் கூறிய நாணுடைமை
கண்டது கண்டு விழையாமை—விண்டு
வெறுப்பன செய்யாமை வெஃகாமை நீக்கி
உறுப்போ டுணர்வுடையாள் பெண்"

"மடப்பதூஉ மக்கட்பெறுவதூஉம் பெண்பான்
முடிப்பதூஉ மெல்லாருஞ் செய்வர்—படைத்ததனால்
இட்டுண்டில் வாழ்க்கை புரிந்துதா நல்லறத்தே
நிற்பாரே பெண்டிரென் பார்"

என்றற் றொடக்கத்தனவற்றால் மனைவியின் சிறப்பைப் புலவராயினர் துதித்துள்ளனர். தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனாரும் திருக்குறளின் கண்ணே வாழ்க்கைத் துணையைப்பற்றிப் பேசுங்கால்,

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
  * வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" எனவும்,

---

* கிரகதருமத்திற்குத்தக்க நற்குண நற்செய்கைகளையுடையளாய்த் தன்னைக்கொண்டவனது வரும்படிக்குத்தக்க வாழ்க்கையாள், அதற்குத்துணை.

நற்குணங்களாவன:—துறந்தார்களை உபசரித்தலும், விருந்தினரை அறுசுவையோடு உபசரித்தலும், ஏழைகளிடத்து இரக்கமும் ஆகும்.

நற்செய்கைகளாவன:—கிரகதர்மத்திற்கு வேண்டிய பொருள்களை அறிந்து சேகரித்தலும், சமையல் செய்யும் வன்மையும் முதலாயின.

வரும்படிக்குத்தக்க வாழ்க்கையாவது:—முதலை யறிந்து அதற்குப் பொருந்தச் செலவழித்தல்.

* "மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்" எனவும்,

திருவாய்மலர்ந்தருளினர். பெரியாராயினுரும், "கண்ணை யிமைகாக்கும் - கற்றவரைச் சொற்காக்கும் - மண்ணை மழைகாக்கும் - மன்னவரைக் கோல்காக்கும் - கொண்டானைக் கொண்ட குலக்கொடிதான் காக்கும் - பெண்டிரைத் தங்கள் பிறங்குங் குணங்காக்கும் - மனைமாட்சி யின்றேல் - எனைமாட்சித்தாயினுமில்" என்றும் நவில்வராயினர். வறுமையாளர்கட்குப் பிச்சையிடுவதுங்கூட இல்லாளுக்கே யுரியது. வறுமையாளர் ஒரு வீட்டிற்குச்சென்று யாசிக்குமிடத்து அம்மே! தாயே! தர்மம்! பிச்சையிடு வென்று வினவுவாரன்றி, ஸார்! துரையே!! தாங்கியூ (Thank you) சோறிடுவென்று விளம்புவரா? எக்காலத்திலும் அவ்வாறு விளம்பும் வழக்கமின்று. இதை மெய்ப்பிக்கும் பொருட்டே "பவதி பிக்ஷாந்தேகி" என வடமொழி கோஷியா நிற்கின்றது. இன்னும் கடவுள் பூஜை, யாகம், விவாகச் சடங்கு, பிதிர்கர்மம் முதலியன மனையாளில்லான் செய்தற்குத் தகுதியல்லன். இன்னும் யாம் ஓர் இல்லறத்தானை நோக்கி 'உமது யோகக்ஷேமம் என்ன? என்று வினவுகின்றோம். அதன் பொருள் என்னை?

அப்ராப்தஸ்ய ப்ராப்திர் யோக:
ப்ராப்தஸ்ய பரிபாலனம் க்ஷேம:

கிடையாத பொருளையடைதல் யோக மெனப்படும். கிடைத்ததைக் காப்பாற்றுவது க்ஷேம மெனப்படும். இவை வீட்டில் இருவர் மாட்டுநிகழ்வன: யோக மென்

---

* மனையறத்திற்குரிய இலட்சணமில்லையாயின், அவ்வில் வாழ்க்கை எவ்வளவு சிறந்திருப்பினும் இல்லாமை போலாம்.

பது ஆடவரின் தர்மம். க்ஷேமம் என்பது பெண்டி ரின் தர்மம். வீட்டு யோக க்ஷேமம் எவ்வாறுள்ளது என்று கேட்டால், ஆடவனான நீ சரியாய் வெளியிலிருந்து சம்பாதித்துக்கொண்டு வருகிறாயா? வந்தவருவாயை உன் பத்தினி சிக்கனமாய்ச் செலவழித்துப் பாதுகாத்துக் கொள்ளுகின்றாளா? எனப் பொருள்படும். இவற்றை யெல்லாம் நோக்கின் ஆடவர் பெயரளவின்றி மற்றைய சுதந்திரங்கள் யாவும் ஸ்திரீகளுக்குத்தான் என்பது வெள்ளிடை மலையே. இத்தகைய நுட்பதிட்பத்தினை யறியாது செல்வச் செருக்குற்ற ஆடவர் பலர் தம் தம் மனைவியர் எனப்படும் அரக்கியர் பால் படுந் துன்பத்தைச் சகிக்கலாற்றாது, வெளியிற் சொல்ல அஞ்சியும், பல பாதர் கூடுமிடம் செல்லல் நோக்கியும், பெண்களுக்கு சுதந்திரம் வேண்டும்! பெண்களுக்கு சுதந்திரம் வேண்டும்!! என மதி மயங்கி பறையறைந்து கூவுவர்! என்னே இவ்விபரீதம்!! ஆடவர்க்குள் கர்மாநுஷ்டான மின்றி மிருகத்துக்கொப்ப வெறிகொண்டு திரிவோர் எத்தனை பேர்? மனம் மாசற்று எல்லாம் வல்ல இறைவனை வழிபாடுசெய்து நற்கதிபெற விதித்த "விக்ரஹ ஆராதனை"யை யிகழ்ந்துரைப்போர் எத்தனைபேர்? பூஜையைத் தன் கரத்தால் செய்ய வெட்கிப் பிறரைச் செய்யச்சொல்லி வாணாளை வீணாளாக்கும் விழலர்கள் எத்தனைபேர்? "நீறில்லா நெற்றி பாழ்" என ஔவைபிராட்டியார் அருளிய வாக்கியத்தைக் கடந்து லலாட சூநியர்களாய் ஆசுர வேதாந்தம் பேசுவோர் எத்தனை பேர்? இறைவனாலே விதிக்கப்பட்ட வர்ணாஸ்ரம தர்ம ஒழுக்க நிலையைக் கடந்தும், ஒழுக்க முறைகளின் உட்

பொருளை யுணராது திருத்தஞ்செய்ய முற்பட்டும், முரண்பட்டுழல்வோர் எத்தனைபேர்? பிறன்மனை விரும்புதல் பெரும்பாவமெனத் தினைத்துணையும் சிந்தியாது பிறனில் புகுவோர் எத்தனைபேர்? காற்சட்டை, மேற்சட்டை, பூட்சு, தொப்பி, முதலியன அணிந்து, தலைமயிரை வேடர்போல் கத்தரித்துக்கொண்டு, கரத்தில் சிகரெட்டுடன் கண்ணாடி மூலமாய்த் தன்னழகைக் கண்டு களிகூர்வோர் எத்தனை பேர்? வெள்ளைப் பொடிபோட்ட முகமும் காலாகோல டம்ப உடைகளுமணிந்து, செம்மறியாட்டு மயிர் போன்ற தலைமயிரையுடைய மாதர்களை மோகித்துழல்வோர் எத்தனை பேர்? நமது அரசாட்சியில் அந்தணர் முதலியோர்கள் ஸந்தியாவந்தனாதி கர்மங்கள் செய்ய வாய்க்கப்பெற்றும், அவ்வாறு செய்ய முற்பட்டு நற்கதி பெறாது "உலகத்திற்கு உழைக்கின்றோம்; உழைக்கின்றோம்" எனப் போலியாக வெற்றுரையாடி இழிகுலமாக்களோடு புலால் புசிக்கத் தொடங்குவோர் எத்தனைபேர்? வேதத்தைப் பேதமாக்கி ஏதம் விளைவிப்போர் எத்தனைபேர்? தாய்ப்பாஷையை யறவே துறந்து பேசவன்மையற்றவரா யிருப்போர் எத்தனை பேர்? தன் ஜாதி, தன் மதம் என்பன மறந்து பூர்வீக உணவுகளாகிய மரக்கறி பதார்த்தங்களெல்லாம் மாமிசங்களாகவும், பசும்பால், பாயசம் முதலியன,பனம்பால், தென்னம்பால், ஈச்சம்பால், சாராயம், ஒயின், ஜின் முதலியவைகளாகவும் மாறிவிடுமாறு இழிகருமங்களைப் பூணுவோர் எத்தனைபேர்? இழிந்த கருமத்தால் வரும் நாணங்களை யகற்ற வழி தேடாமல் 'நாணமென்பது நாய்களுக்கு வேண்டும்' என விதண்டாவாதங் கூறிக் குலமகளிர்க்கு மனம், வாக்கு, காயங்களி னொடுக்கத்தால்வரும் நாணத்தைத்

தூற்றும் தூர்த்தர் எத்தனைபேர் ? *(1) அறிவு, (2) நிறை, (3) ஓர்ப்பு, (4) கடைப்பிடியென ஆடவர்க்குரிய நாற்குணங்களை யறவே துறந்துளோர் எத்தனைபேர் ! ஆண் மயில் பெட்டையின் முன்பாக ஆடிச் சந்தோஷிக்கச் செய்வதுபோல ஆடவர்க்கு இயற்கையாய் அமைந்த ஆளுந்தன்மையாகிய சுதந்திரத்தை இழந்து மாதர்கள் சொற்படி நடந்து முறையில்லா முறையில் சந்தோஷிக்கச் செய்வோர் எத்தனைபேர் ? இவற்றையெல்லாம் கண்கூடாகக் கண்டேதான் நாற்பத்திரண்டு வருடங்கட்கு முன் வசித்திருந்த ஒரு வைணவ வித்வான் தாம் இயற்றிய நூலொன்றில்,

“ நம்மவ ரெத்தனைபேர் நாட்டுக்குக் கேடிழைப்பார்
செம்மை நெறிபிசகித் தீங்கொரு நூறிழைப்பார்
பொய்ச் சீட்டெழுதிப் பொய்ச்சாட்சி சொல்லவஞ்சார்.
கைக்கூலி கொள்வார் கடன்வாங்கி யில்லையென்பார்
பிறன்மனைக் கைப்பிடிக்கும் பேதைய ரெத்தனைபேர்
மறைந்து களவுசெய்யும் வஞ்சகர்க ளெத்தனைபேர்
பரத்தையரைச் சேவைசெய்யும் பண்டித ரெத்தனைபேர்
தூர்த்தியே கற்பழிக்குந் துட்டர்க ளெத்தனைபேர்
பண்டித ரெத்தனைபேர் பந்தலுமா ரெத்தனைபேர்
மிண்டராய்த் தீம்பிழைத்து மேலுக்குச் சீலஞ்சொல்வார்
சாஸ்திரிக ளெத்தனைபேர் சம்பன்ன ரெத்தனைபேர்
பார்த்துச் சமயம் பரதாரம் தோய்ந்திருப்பார்
ஆசாரி யெத்தனைபேர் ஐயங்கா ரெத்தனைபேர்
வேசிகள் வீட்டினிலே வேலைகள் செய்திருப்பார்
வெளியில் வரும்போது வீண்விருது கூடவரும்
பளபளவென்று பகல்வேஷந் தாந்தரிப்பார்
சந்நியாசி யெத்தனைபேர் தாசியொடு ராக்கழிப்பார்

---

* (1) உண்மையை உணர்வது அறிவு, (2) காப்பனகாத்துக் கடிவன கடிந்து ஒழுகுதல் ஒழுக்கம்; (3) ஒரு பொருளை ஆராய்ந்துணர்தல் ஓர்ப்பு; (4) கொண்ட பொருளை மறவாமலிருத்தல் கடைப்பிடித்தல் என முறையே கூறப்படும்.

மின்னிய தாலியில்லா முண்டைகளை மேவிநிற்பார்
சளுக்குப் பிளுக்குமுள்ள தட்டோட்ட ரெத்தனைபேர்
தளுக்குக் குலுக்கிவரும் தட்டுகள் பின்றொடர்வார்
தேவடியாள் வாயுறுஞ்சிச் சின்ன மழியாமல்
கோவிலிலே போரங்கட்குக் கோலவபிஷேகஞ்செய்து
திருநீறுதந்து திருத்துழாய் கைக்கொடுத்தே
அரிய சடகோப மானதலை மேற்பதித்துத்
தீர்த்தமது வார்த்துத் தினமும் புரட்டிழைக்கும்
தூர்த்தர்களெத்தனைபேர் சொல்லக் கணக்குமுண்டோ?"

என விளக்கியுள்ளார்.

இத்தகைய தீச்செயல்களைப் பூண்டுள்ளார் பலர் தம் சுதந்திரத்தை யிழந்துள்ளதை யோராது, பிறர்க்கு சுதந்திரம் வேண்டுமெனப் பிதற்றுவது என்னே அறியாமை! தம் தம் குற்றங்களை யோர்ந்து நல்வழியில் நடக்க முயல்வாராக. எவனொருவன் தனக்குரித்தாகிய நாற்குணங்களைப் பூண்டுள்ளானோ அவனே பேராண்மை யுடையான். அவ்வகைய மாண்பினன் ஒத்த பருவமும் ஒத்த குலமுமுடைய கன்னிகையை அக்கினி முன்பாக மணஞ்செய்து இல்லத்திலிருந்து அநுபவிக்கும் இன்பமே அறநிலை இன்பம். அத்தகைய மாண்பினை யுடையானும் உடையாளும் நடத்தும் அறமன்றோ இல்லறம் என ஆன்றோர் அருளினர். நமது மூதாட்டியும் "இல்லற மல்லது நல்லற மன்று" என நாட்டுவாராயினர். அயல்நாட்டினர் தர்மசொரூபம் இன்னதென்றறியார். இன்றுயாவரும் ஒருமுறையைத் தழுவ வேண்டுமென நாட்டுவர். அடுத்த நிமிஷமே மனம்போனபடி மாற்றிக்கொள்வர். நம் நாட்டினர் அத்தகையினரல்லர். தர்ம சூக்ஷுமத்தை நன்கு உணர்ந்தவர். உயிருள்ளளவும் எவ் விடையூறுவரினும் தர்ம

நிலையில்நிற்பர். அத்தர்மம் முக்காலமு முணர்ந்த முனிவர்களால் ஆராயப்பட்டது. அதை ஒருவராலும் அசைத்தல்முடியாது. பேதபுத்திகொண்டு அசைப்போர் அழிவுறுவர் என்பதுதிண்ணம். நிற்க, சுதந்திரம் என்னும் சொல்லை உபயோகிக்கும் முறையறியாது ஸ்திரீகளுக்கு சுதந்திர மளியாது அடிமையாய்ப் பாவிக்கின்றனர் என்று கொள்ளுகின்றனர். 'அடிமை' என்னும் இழிசொல்லைக் குடும்ப காரியங்களில் உபயோகித்தல் அடாது. "தந்தை சொன்ன கட்டளைக்கு மகன் பணிய வேண்டாம்' செங்கோலரசனுக்குக் குடிகள் அடங்க வேண்டாம். ஆசிரியரை மாணவன் மதிக்க வேண்டாம். கணவனை மனைவி வேலையிடலாம். அவனுக்கும், அவளுக்கும் பேதமில்லை. அடிமையினும் அடிமையாகப் பாவிக்கக்கூடாது. ஆகையால் அவன் சொற்படி கேட்க வேண்டாம்" என்பதாகச் சிலர் விபரீதமாய்ப் பொருள்கொண்டு படுகுழியில் விழுகின்றனர். அந்தோ! அந்தோ! கண்புதைந்த மாந்தர்காள்! நும் குடிவாழ்க்கை என்னே! அது * குடியர் வாழ்க்கையோ! அறிகிலம்.

சுதந்திரம் பெறவேண்டும், சுதந்திரம் யாவர்க்கு முரித்தே என்றால் சகல ஜனங்களும் அடையக்கூடிய லட்சிய ஸ்தானமாகிய முக்தியை ஒழுங்காய் யாவரும் சுதந்திரமா யடையலாம். இலட்சணத்திலே தாரதம்யங்களுண்டு. கடவுள் தம் படைப்பில் ஆண் பெண் என்பவைகளில் இயற்கையாகவே வேற்றுமைப் படுத்தியுள்ளார். உதாரணமாக, எழுவகைப் பிறப்பிலடங்கியுள்ள ஊர்வனவற்றை யெடுத்துக் கொள்வோம்.

* போதாவஸ்தையுள்ளோர் குடி எவ்வாறு அல்லற்படுமோ அவ்வாறிருத்தல்.

ஆண் எறும்பு:—சிவப்பாயும், முகத்தில் மீசை, யைப்போன்ற இரண்டு புள்ளியை யுடையதாயும், மிக்க வீரிய முடையதுபோல் பல எறும்பினங்களனைத்தை யும் இயற்கையிலேயே ஆளுந் தன்மையதாயும், கடித் தால் நோய் மிகச்செய்வதாயு மிருத்தலைக் கண்கூடா கக் காண்கின்றோம்.

பெண் எறும்பு:—கறுப்பாயும் கடித்தால் இயற் கையிலேயே அதிகநோய் செய்யாததாயு மிருப்பதைப் பார்க்கின்றோம்.

இவ்வாறே இயற்கையாயமைந்துள்ள வேற்றுமை யைப் பசுவுக்கும் காளைக்கும் பார்க்கலாம். அங்ஙனமே ஆண்சிங்கம் பிடரிமயிரும், கொழுத்த புஜமும், கூர்மை யுள்ள நகமும், முகத்தில் கடுகடுத்த கோபமும், மிக்க ஆண்மையும் அமைந்திருத்தலையுங் காணலாம். ஆரண் யத்தில் ஆண்யானை முன்னும் பெண்யானை பின்னும் செல்வதையு முற்று நோக்கலாம். ஆண்மான் பெண்மா னுக்கு அமைந்துள்ள குணத்தையும் ஆலோசிக்கலாம். * ஆண்மை — ஆளுந்தன்மையெனப் பொருள்படுவதற் கேற்ப எத்தனையும் முற்பட்டுச் சென்று கிளர்ச்சி மிக்க வர்களாய் ஆடவரிருப்பதையுங் காணலாம். பெண்மக் களோ அங்ஙனம் விரைந்து செய்யாது ஆழமாய் நினைத் துப் பார்த்துப் பார்த்து அமைதியுடன் செய்து முடிப் பதையும் நோக்கலாம். அமைதியாக ஆழ்ந்துசெய் யுங் காரியமே பிழைபடுதலில்லை. அதனால்தான் ஒவ் வொரு சமயம் புருஷன் குடும்பத்தில் தவறி நடக்கு மிடத்து மனைவி அமைதியாய் எடுத்துரைத்தல் வேண் டுமெனப் "பார்யா தர்மம்" செய்தருளிய வாத்ஸ்யாய

* ஆண்மை-கட்புலனும் ஆள்வினைத்தன்மை.

னர் கூறுகின்றார். ஆண்மக்களைவிட எத்தனையோ மடங்கு சிறந்த அமைதித்தன்மையைப் பெற்றும், அதனைப் பயன்படுத்திக் கொள்ளாவிடின் பெண்மக்கள் பெருங் குற்றத்திற் குட்படுவர். அமைதிக் குணத்தை விட்டவர் வடிவத்தால் பெண்மக்களைப்போ லிருந்தாலும், அவர்கள் கொடுங்குணமுடைய ஆண்மக்களினுங் கீழ்ப்பட்டவர். வடிவத்தால் பெண்கள்போல் தோன்றிக் குணத்தில் மிக இழிந்தவர்களா யிருப்பவர்களைத் தமிழ்ப்புலமை யுடையார் நூல்களில் இழித்துரைத்துள்ளார். வடிவத்தால் பெண்ணுயிருத்தலின் சங்கர் பின்வருமாறு வரையறுப்பேற்படுத்தி யுள்ளார். அவை யாவன:—

"கிரகத்தினின்று செல்லும்போது கணவனிடம் கூறாது செல்லலாகாது. பதில் வசனம் கூறாது வேகமாய் நடத்தல் கூடாது. வியாபாரி, விருத்தர்கள், வைத்யர்கள், இவர்களன்றி ஏனைய புருஷர்களுடன் பேசுதல் தகாது. நாபி தெரியச் சேலையுடுத்தல் கூடாது. அவயவங்களை மூடிக்கொண்டிருத்தல்வேண்டும். கணவரையும் அவரது பந்துக்களையும் இகழ்தல் ஆகாது. நன்னடக்கையில் மாறுபட்ட மாதர்களின் இணக்கங்கூடாது. இந்திரியத்தை யடக்கல் வேண்டும். இவ்வாறு ஒழுகுவோர் நற்கதியைப் பெறுவர்."

பெண்மக்கள் சார்பாய்க் கருணை கூர்வதுபோல் கூர்ந்து வாதிக்கும் ஆடவரிற் பலர் "ஸ்திரீ தர்மம்" யாவும் புருஷர்களாலேயே செய்யப்பட்டதென்றும், ஸ்திரீகளின் கஷ்டத்தை ஸ்திரீகளே யறிவார்களென்றும், புருஷர்கள் அறியார்களென்றும் வாதிப்பர்.

"ஸ்திரீ தர்மம்" இயற்றியவர் யாவரும் ஒழுக்கம் உயிரைக்காட்டிலும் சிறந்ததெனக்கொண்டு நடந்தவர்; வேதங்களைக் கரைகண்டவர்; அணிமாதியோக சித்திகளின் தன்மையறிந்தவர்; முக்காலத்தின் நிலைமைகளையும் முறையே உணர்ந்தவர்; அவர்கள் தாம் மஹரிஷிகள். இறைவன்சங்கற்பத்தையுணர்ந்து தர்மங்கள் செய்தவர். அத்தர்மங்கள் எக்காலத்திலும் அழிவுறாதன. அவை கேவலம் அயல்நாட்டார் தர்மம்போல இன்றைக்கு ஒரு சட்டம் நாளைக்கொரு சட்டமாகமாறி நாசமுறுவிக்குந்தன்மையவன்று. நம்முடைய தர்மம் இம்மையிலும் மறுமையிலும் உதவக்கூடியது. நாம் எப்பொழுதும் மஹரிஷிகள் அடிச்சுவட்டைப் பின்பற்றுகிறவர்களாயிருக்கிறோமாகையால், அயல்நாட்டு மாதர்களின் கொள்கையையாவது, மதம்மாறியவர்களின் கொள்கையையாவது தழுவவேண்டுமென்பதில்லை. ஆயினும், உயர்தரக் கல்வியைப்படித்துச் சர்வகலாசங்க பரீட்சையில் தேறியுள்ள எ-எம்-பி-சாமுவேல் அம்மை என்பார் படித்த படிப்பிலுணர்ந்துகொண்ட தன்மையைக் கவனிப்போம். அவர் "வெஸிலி மிஷன் உயர்தரப் பெண்பாடசாலை"யில் தலைமை உபாத்தியாயனி உத்தியோகத்தை வகித்தவர். அவர் இயற்றியுள்ள "இல்லற இன்ப இரகசியம்" (Secret of A Happy Home) என்னும் புஸ்தகத்தில்:—

"புருஷருடைய நேசத்தைவிட ஸ்திரீகளுடைய நேசம் அதிசீக்கிரத்தில் கெடக்கூடியது. எப்படி அவர்கள் தேகத்தில் பலவீனராயிருக்கிறார்களோ அப்படியே மனதிலும் பலவீனராயிருக்கிறார்கள்".

* * *

"சில பெண்கள் குடித்தனத்துக்குரியவற்றைச் செய்யவேண்டிய நேரத்தை வேறு காரியங்களைச் செய்வதில் போக்குவதினுல் அதிக சங்கடங்கள் குடும்பத்திலுண்டாவதுண்டு".

*　　*　　*

"சில ஸ்திரீகள் சர்வ கலாசாலை பரீட்சையில் தேறினவர்களா யிருக்கலாம்; உயர்ந்த சம்பளம் பெற்றுக் கொள்ளுகிறவர்களா யிருக்கலாம்; ஆனுல், தம் குடும்பத்தைச் சரியானபடி நடத்தக் கூடாதவர்களா யிருப்பார்கள். மேற்சொன்ன நாகரிகங்களில் தேறியிருப்பது சிறந்ததே. ஆனுல் குடும்பத்தை நடத்துவதில் திறமையற்றவர்களா யிருப்பார்களாகில் முன் சொல்லப்பட்ட வித்தைகளெல்லாம் என்ன பிரயோஜனம்?"

*　　*　　*

"இந்தக் காலத்தில் உடை நடைகளையும் வீண் டம்பங்களாகிய வெளி வேஷத்தைமட்டும் மாப்பிள்ளை வீட்டார் கவனிப்பதால் பெண்களும் வெளியே டம்பமாயும் அதிக மெலுக்காயும் காட்டலாமென்று பிரயாசைப்படுகின்ருர்கள். அநேகம் பெற்ரேர் தங்களுடைய பெண்களை எப்படி நன்ருய் உடுத்துவிக்கலாமென்றும், மற்றப் பெண்களைவிட எப்படித் தங்களுடைய பெண்கள் சிறந்தவர்களாய்க் காணப்படுவார்களென்றும், வீண்டம்பமான காரியங்களை விரும்புவதில் பயிற்றுவிக்கின்ருர்களேயன்றி, அவர்கள் எப்படி மற்றவர்களுக்கும், தங்களுக்கும் பிரயோஜன முள்ளவர்களாவார்க ளென்பதையும், வீட்டுக் குடித்தனத்தை எப்படி நன்ருய் நடத்தலா மென்பதையும் பழக்குவியார்கள்".

*　　*　　*

"ஆண்பிள்ளைகள் வேலைக்குப்போய் அலுத்தவர்களாய்ப்பசியோடு வீட்டுக்குத்திரும்பிச் சாப்பாட்டுக்கு முன் உட்கார்ந்து சுவையற்ற (கெட்டுப்போன) உண்டிகளையருந்தும்படி மனைவிமார் பார்த்துக்கொண்டிருப்பது அதிக அநியாயமும் நிஷ்டூரமுமான காரியம்".

* * *

"முகத்தின் வேர்வை நிலத்தில்வீழப் பாடுபட்டுச் சம்பாதிக்கும் பணத்தை வீண்காரியங்களில் செலவிட்டு வயிற்றிற்கு வேண்டிய ஆகாரம், வாய்க்கு ருசியில்லாமல் மருந்து அருந்துவதுபோ லிருக்குமாகில் விவாகஞ்செய்து வீட்டில் உட்கார்ந்துகொண்டிருக்கும் பெண்களுக்கென்ன வேலை?"

* * *

"பெண்கள் நாங்கள் அடுப்புவேலை செய்யவா போகிறோம் என்று சொல்லலாம் * * * * * அவர்களுடைய கணவர் தகுந்த சம்பளம் வாங்கலாம். அநேக வேலைக்காரரிருக்கலாம். மெய்தான். என்ன பிரயோஜனம்?"

* * *

"உன் புருஷனைப்பற்றி உனக்கிருக்கிற கவலை உன் வேலைக்காரருக்கு இருக்குமா?"

* * *

ஆடவருக்கு அநேக விஷயங்களைக் கூர்ந்து கவனிக்கவும், அநேக விஷயங்களைச் சிக்கறுத்து ஒழுங்குபடுத்தவும், அநேக விஷயங்களை வேறுபிரித்துத் தள்ள வேண்டியவைகளைத் தள்ளிவிடவும் சாமர்த்திய முண்டு.

* * *

ஆடவர் மேற்கொள்ளும் இயல்பும், ஸ்திரீகள் கீழடங்கு மியல்புமுடையவர்கள். மனிதன்பெரும்பாலும்யோசனைக்காரன்; ஸ்திரீயோ பெரும்பாலும் பேச்சுக்காரி; மனிதன் உலகத்திலுள்ளவைகளை யெல்லாம் அடக்கியாள உண்டாக்கப்பட் டிருக்கிறான். ஸ்திரீயோ அவனையடுத்து வாழ உண்டாக்கப்பட் டிருக்கிறாள்."

* * *

"பெண்கள் வீட்டுவேலை செய்யப் பழகவேண்டும். உயர்ந்த அந்தஸ்துள்ள பெண்கள் நாற்காலியிலே ஒட்டப்பட்டுப் போனவர்களைப்போல் உட்கார்ந்து கொண்டும், புஸ்தகங்களை வாசித்துக்கொண்டும், கின்னரம் வாசித்துக்கொண்டு மிருக்கிறார்கள். இது தேகாப்பியாசத்திற் கேற்றதல்ல. வீட்டுவேலை செய்தால் தேகமசைந்து என்புகளும் நரம்புகளும் பலப்படும்" என ஆங்காங்கு அறிவுச் சுடர்கொளுத்தி வரைந்துள்ளார். பெண்மக்களைக் கைதூக்கி விடவந்த நேயர்களே! சற்றுன்றி இருமுறை நோக்குமின்! நும்மக்களைத் தீநெறியிற் செல்வதை விலக்க வழி தேடுமின்! மேனாட்டு வாசியாகிய ஜெரிமி டேயிலர் என்பவர் "மனிதன் ஆண்மையும் அஞ்சா நெஞ்சும் படைத்தவன்; ஸ்திரீயோ அவநம்பிக்கையும் நேர்மையுமுள்ளவள். மனிதன் எக்காரியத்தையும் முடிக்க வல்லவன். ஸ்திரீயோ எத்துயரத்தையும் சகிக்கவல்லவள். மானிடன் புறத்தே புகழ்பெறுவான். ஸ்திரீயோ இல்லின்கண் இசைபெறுவாள்" என்று கூறியுள்ளார். இஸ்லாமதக்கர்த்தராகிய முஹம்மத்நபீ பின்வருமாறு கூறுகின்றார். அவையாவன:—

* * *

"சற்குண மனைவி புருஷனுக்குச் சிறந்த நிதியமாகிறாள்"

* * *

"கண்டித்தாலும் அன்போடு கண்டிக்கக் கடவை"

* * *

"பகவான் சந்நிதானத்திலும் அவரது படைப்புகளின் முன்னிலையிலும், (உங்களில்) உத்தமர் யாவரெனின், தமது குடும்பங்களில் நன்னடக்கையாய் நடக்கின்றவர்களே"

* * *

"மாதர்கள் ஒரு நாளைக்குமேல் பிரயாணஞ்செய்ய நேர்ந்தால், துணையாகப் பந்துக்களில் யாராவது (யோக்யதையான) ஆடவன் உடன் செல்லல் வேண்டும்"

* * *

"ஸ்திரீகள் தங்களுக்குரிய சுதந்திர வரம்பை மீறாது ஒழுகுமாறு புருஷர் கவனித்தல்வேண்டும்"

கிறிஸ்துமத புஸ்தகமாகிய பைபிலில்:—

"குணசாலியான ஸ்திரீ தன் கணவனுக்குத் தலைநாயகமாய் விளங்குகிறாள். வெட்கத்தை யுண்டு பண்ணுகிறவள் அவனுக்கு என்புருக்கியா யிருக்கிறாள்."

மேற்காட்டிய வாக்கியமெல்லாம் ஸ்திரீகள் அநுபவிக்க வேண்டிய சகல போகங்களும் குடும்பத்திலேயே யென்று ஒருவாறு விளக்கினாலும், நம் மஹரிஷிகளும் முதியோர்களும் விதித்துள்ள 'தர்மம்' தான் என்றும் நிலைபே றுள்ளது; சுருங்கச்சொல்லி விளங்க வைத்துளது; மாதர்களுக்கு சுதந்திரம் கிரஹத்தில் ஏற்பட்டிருக்கின்றது. அம்மஹான்கள் விதித்துள்ள விதியை ஆழ்ந்து கவனிப்போம்.

𑌸𑌦𑌾 𑌪𑍍𑌰𑌹𑍃𑌷𑍍𑌟𑌯𑌾 𑌭𑌾𑌵𑍍𑌯𑌂 𑌗𑍃𑌹𑌕𑌾𑌰𑍍𑌯𑍇 𑌚
𑌦𑌕𑍍𑌷𑌯𑌾 । 𑌸𑍁𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑍋𑌪𑌸𑍍𑌕𑌰𑌯𑌾 𑌵𑍍𑌯𑌯𑍇 𑌚𑌾
𑌮𑍁𑌕𑍍𑌤𑌹𑌸𑍍𑌤𑌯𑌾 ॥

[எக்காலத்திலும் மலர்ந்த முகத்தை யுடையவளாய், குடும்பக் காரியங்களில் வல்லவளாய், பதார்த்தத்தை நன்குபேணிப் பரிமளிக்கச் செய்பவளாய், சிக்கனமாய்ச் செலவு செய்பவளாயிருத்தல் வேண்டும்.]

𑌅𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑍇 𑌚𑍈𑌨𑌾𑌂 𑌵𑍍𑌯𑌯𑍇 𑌚𑍈
𑌵 𑌨𑌿𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 । 𑌶𑍌𑌚𑍇 𑌧𑌰𑍍𑌮𑍇𑌽𑌨𑍍𑌨𑌪𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌂
𑌚 𑌪𑌾𑌰𑌿𑌣𑌾𑌹𑍍𑌯𑌸𑍍𑌯 𑌚𑍇𑌕𑍍𑌷𑌣𑍇 ॥

[வீட்டுக்கு வேண்டிய பாத்திர முதலியவற்றை யடைவதற்காகக்கொடுத்த பொருளைப்பத்திரப்படுத்துவது, செலவு செய்வது; பாத்திரம் முதலியவற்றைச் சுத்திசெய்வது, வீட்டை விளக்குவது, தேவபூஜை முதலிய வற்றிற்குவேண்டிய காரியஞ்செய்வது; சமையல் காரியம், வீட்டுப்பாத்திரம், படுக்கை, முதலியவற்றைப் பார்த்தல் முதலிய முக்கியமானவைகளை மனைவிக்குக்கற்றுக்கொடுத்து மனம்பிறவிஷயங்களில் செல்லாவாறு காக்க].

𑌪𑌾𑌨𑌂 𑌦𑍁𑌰𑍍𑌜𑌨𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌃 𑌪𑌤𑍍𑌯𑌾 𑌚 𑌵𑌿𑌰
𑌹𑍋𑌽𑌟𑌨𑌮𑍍 । 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍋𑌽𑌨𑍍𑌯𑌗𑍇𑌹𑌵𑌾𑌸𑌶𑍍𑌚 𑌨𑌾𑌰𑍀𑌸𑌂
𑌦𑍂𑌷𑌣𑌾𑌨𑌿 𑌷𑌟𑍍 ॥

[மதுபானஞ் செய்தல், துஷ்டருடன் சிநேகஞ்செய்தல், கணவனைப் பிரிந்து வேற்றூர்ப் புகுதல், காரணமின்றி அங்குமிங்கும் அலைதல், பிறவீட்டில் தங்கியிருத்தல், விருப்பங்கொண்டவிடத்தில் படுத்துறங்கல், இவ்வாறும் மாதர்களுக்கு ஆகா.]

𑌵𑍇𑌶𑍍𑌯𑌾𑌶𑍍𑌵𑌶𑍍𑌵𑌿𑌸𑌂𑌸𑍃𑌷𑍍𑌟𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌵𑌿𑌶𑌵𑌿𑌤
𑌵𑌿𑌵𑌿𑌯𑌕𑌾𑌸𑌾𑌂 𑌶𑍍𑌰𑌕𑍍𑌷𑌹𑍀𑌨𑌿𑌤𑌯𑍁𑌂 𑌹𑍃𑌦𑍍𑌯

𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌤𑍍𑌰𑌿𑌷𑌵𑌣𑌾𑌚𑌰𑌿𑌤𑌬𑌲𑌿𑌕𑌰𑍍𑌮𑌪𑍂𑌜𑌿𑌤
𑌦𑍇𑌵𑌤𑌾𑌯𑌤𑌨𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 ‖

[மனைவி வீட்டை மழமழவென்று இருக்குமாறு தரையைச் சுத்தமாயும் பார்வைக்கு அழகாயுமிருக்குமாறு மெழுகிப் பெருக்கி அநேகவித மலர்களால் அலங்கரித்தும் வைத்திருக்க வேண்டும். தெய்வமிருக்கும் அறையைப் பூஜித்து வீட்டில் காலையிலும், பகலிலும், மாலையிலும் ஜீவராசிகளுக்குப் பிட்சையளித்தல் வேண்டும்.

𑌭𑌿𑌕𑍍𑌷𑍁𑌕𑍀 𑌶𑍍𑌰𑌮𑌣𑌾 𑌕𑍍𑌷𑌪𑌣𑌾 𑌕𑍁𑌲𑌟𑌾
𑌕𑍁𑌹𑌕𑍇𑌕𑍍𑌷𑌣𑌿𑌕𑌾 𑌮𑍂𑌲𑌕𑌾𑌰𑌿𑌕𑌾𑌭𑌿𑌰𑍍𑌨 𑌸𑌂
𑌸𑍃𑌜𑍍𑌯𑍇𑌤 ।

[பிச்சைக்காரி, சந்நியாசினி, க்ஷபணை, கற்புநிலை தவறினவள், மோசஞ்செய்பவள், குறிசொல்பவள், மருந்திடுபவள், முதலியோருடன் மனைவி அணுகுதல் கூடாது.]

𑌅𑌤𑌿𑌵𑍍𑌯𑌯𑌸𑌂𑌵𑍍𑌯𑌯𑌂 𑌵𑌾 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌂 𑌰𑌹
𑌸𑌿 𑌬𑍋𑌧𑌯𑍇𑌤𑍍 ।

[மனைவி, வரவுக்குமிஞ்சி செலவு செய்யும் விஷயத்திலும் கெட்ட நடவடிக்கை உத்தேசித்து செய்யும் அல்லது செய்கிற புருஷனிடத்திலும் "இச்செய்கை அழகன்று" என அன்போடும் பணிவோடும் தனிமையாக உரைத்தல் வேண்டும்.]

𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌵𑌿𑌵𑌾𑌹𑌯𑌜𑍍𑌞𑍇𑌷𑍁 𑌗𑌮𑌨𑌂 𑌸𑌖𑍀
𑌭𑌿𑌃 𑌸𑌹𑌗𑍋𑌷𑍍𑌠𑍀𑌂 𑌦𑍇𑌵𑌤𑌾𑌭𑌿𑌗𑌮𑌨𑌂 𑌚𑌾𑌨𑍁𑌜𑍍𑌞𑌾
𑌤𑌾 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 ।

[மனைவி, வேறு வீடுகளுக்கும் கூட்டங்களுக்கும் போதல் கூடாது; இவ்வரம்பைக்கடந்துபோனால் கணவனுக்கு இவளொழுக்கத்தில் சந்தேகமுண்டாகும். ஆயினும் வரன் வீட்டிற்கும் கன்னியாவீட்டிற்கும் விவாஹம் நிச்சயஞ்செய்யச் செல்லுதல், யாகத்தைப் பார்க்கச் செல்லல், [கற்பின் மேம்பட்ட] தோழி

மார்களுடன் சம்பாஷணை முதலியன செய்தல், தேவாலய தரி சனத்திற்குப்போதல் ஆகிய இவற்றைக் கணவன் கட்டளை யிட்டால் மனைவி செய்யலாம்]

ஸாயிக்ஷேபவவசநைநம் த்ருஜநஸ்யஸ்ஸ ஸைகாகிநம் வாவ்ருவாயுஷோத| நவஸிருகாரி காஸ்ருச் ||

[கணவன் மனைவியை இகழ்ந்து பேசினால், அவன் தன் இயற்கைச் சிநேகிதர்களோடு இருக்கும் தருணத்திலாவது தனி யாக விருக்கும் தருணத்திலாவது அவனை மனைவி தக்க காரணத்துடன் அன்பினாலே கடிந்துகொண்டாலும் கொள்ள லாம். ஆனால், மருந்திடுதல் கூடாது].

"கற்புங் காமமு நற்பா லொழுக்கமு
மெல்லியற் பொறையு நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலுஞ் சுற்ற மோம்பலும்
பிறவு மன்ன கிழவோண் மாண்புகள்***"

(தொல்காப்பியம்)

[கணவன் முதலியோர் கற்பித்த நிலையிற் றிரியாத நல் லொழுக்கமும், அன்பும், எவ்வகையாலும் தத்தங்குலத்திற்கு ஏற்றவாற்றால் ஒழுகும் ஒழுக்கமும் இரக்கமோடு பொறுக்கும் பொறுமையும், கற்பு என்னும் கலங்கா நிலைமையாய் விருந் தினரைப் பாதுகாத்து அவர் மன மகிழ் வித்தலும், உறவின ரைப்பாதுகாத்தலும் முதலானவை தலைவி(மனைவி)க்குரித்து.]

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உரீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான் துழந்து அட்டதீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே"

(குறுந்தொகை)

[தன் மகள் வற்றக்காய்ச்சின கட்டித் தயிரைப் பிசைந்த காந்தள் மலர் முகிழ்போற் சிவந்த மெல்லிய விரல்களால் இடுப்பிற்கட்டிய ஆடை சமையல் செய்யும் அவசரத்தால் கழல, அதனைக்கழலாவாறு உடுத்து, குவளைமலர்போன்ற மைதீட்டிய தன் கண்ணிலே தாளிப்புச் செய்யும் புகைபடிந்து கமழ, அதனையுங் கருதாது, தான் அகப்பையினாலே மிக்க அன்போடு துழாவிசமைத்த இனிய புளித்தலுடைய பாகினைக் கணவன் இனிமையா யிருக்கின்றதென்று கூறிக்கொண்டே உண்ணுதலைக்கண்டு, அவள் முகம் உள்ளுக்குள் நுட்பமாய் மகிழ்ந்தது.] இதனால் தன் கணவனுக்குத்தானே பணிவிடை செய்யவேண்டுமென்பதும், மனைவியின் தருமமும், மனைவி கணவன்மீது வைத்துள்ள அன்பினாலே பணிவிடை செய்யும் ஒழுங்கும், புருஷன் மனைவி மீது செலுத்த வேண்டிய அன்பும் முதலியவைகள் இருமுறை ஊன்றி நோக்கின் நன்கு அறியலாம்.

குடநீரட் டுண்ணு மிடுக்கட் பொழுதுங்
கடனீ ரறவுண்ணுங் கேளிர் வரினுங்
கடன்நீர்மை கையாறுக் கொள்ளு மடமொழி
மாதர் மனைமாட்சி யாள்.

[ஒரு குடத்துநீரைக் காய்ச்சியுண்ணும் வறுமைக் காலத்திலும், கடனீரை வற்றச் செய்தாலொத்த உறவினர் வந்தவிடத்தும், கடமையாகிய தன்மையை ஒழுக்கநெறியாய் நடந்துகொள்ளும் மிருதுவான சொல்லையுடைய பெண்ணே இல்லறத்திற்குரிய மாட்சிமையினை யுடைய குணத்தாள்.]

கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவா
ளுட்குடையா ளூர்நா ணியல்பினா—ளுட்கி

யிடனறிந் தூடி யினிதி னுணரு
மடமொழி மாதராள் பெண். (நாலடியார்)

[கண்ணுக்கினிய தோற்றமுடையாளும், மணந்த புருஷன் விரும்பியவாறு அழகுசெய்து கொள்பவளும், ஊருக்கு நாணுமியல்புடையவளும், ஊராரைக் கண்டு நாணுந் தன்மையளும், புருஷனுக்கு அஞ்சி சமயமறிந்து பிணங்கி அப்புலவி தீர்க்கும் தன்மையுடைய இனியமொழி பேசுபவளுமாகிய பெண்ணே, பெண் தன்மைக்குரியள்.]

"வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்ந்துவிருந் தோம்பித்—திருவாக்குந்
தெய்வதையு மெஞ்ஞான்றுந் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்டீர் சிறப்பு." (சிறுபஞ்சமூலம்)

[தம் கணவரது வருவாயினளவை யறிதலும் அதற்கேற்ப செலவழித்தலும், உறவினரை ஓம்பலும் விருந்தினரை உபசரித்தலும், கடவுள் வழிபாடும் ஆகிய இவ்வைந்தும் மாதர்க்குரிய தர்மம்.]

இல்ல றத்திற் கியைவன வீட்டுவா
ரல்ல செய்தே வறிதி னழித்திடார்
புல்லு காதல ராயுட் பொலிவுற
மல்ல லோங்கணி மஞ்ச ளணிவரால்.

(காசிகாண்டம்.)

[கற்புடை மகளிர் இல்லறத்திற்கு வேண்டியவற்றைச்சேர்த்து பாதுகாத்துக் கொள்வார்கள்; தீக்கருமங்களைச்செய்து ஒன்றையும் அழித்தல் செய்யார்கள். கொண்ட கணவரது வாழ்நாளதிகரிக்கும்படி வளமிகுந்த அழகு செய்கின்ற மஞ்சளைப் பூசுவார்கள்.]

ஈண்டுக் காட்டிய மேற்கோள் யாவும் ஸ்திரீகள் இல்லறத்தைப் புல்லறமாகச் செய்யாமல் நல்லறமாகச்

செய்தலே தர்மமெனப் பசுமரத்தேறிய ஆணி போல் மனத்திற் பதியும்படி நன்கு வற்புறுத்தி யிருத்தலேக்காண்க. ஆங்காங்கு அநுமதியின்பேரில் சுதந்திர மளித்திருப்பதையுங் கண்கூடாகக் காண்க. இவற்றை யாழ்ந்து நோக்காது நுனிப்புல் மேயுங் குணமுடையார் நம் முன்னோர் நாகரிகத் துறையே யறியாத கபோதிகளென்றும் தற்காலத்தி லேதான் நாகரிக முற்றி வருகின்றதென்றும், கருது கின்றவர்களாய், உன்மத்தங் கொண்டுழன்று,

கள்ளேவிற் றுக்கலப் பொன்றேடு வாழ்வினுங்
கற்பூரம் விற்றுகாற் பொன்றேடல் வாசியே
ஆசாரம் விட்டுவை கோர்ட்ஜட்ஜி யாகிலென்
சோமசுந் தரதனய சொல்லு கோவிந்தா.

என்னுஞ் செய்யுளின் உட்பொருளே உணராது ஆசாரமிலராய் மிருகத்துக்கொப்ப, கண்டவிடத் தில் மனம்போனபடி புசிக்கும் குணமுடையவராகி மாதர்களுக்கு முன்னோர் விதித்துள்ள முறையைப் பித் தர்களின் பிதற்றலென்று வாயில் வந்தன வந்தன பிதற்றித்திரிவர். அவ்வாறு பிதற்றுவது,

காற்றினெதிரே நின்றொருவன் காறியுமிழு முச்சிட்ட, மாற்றி யவன்மேல்வந்து விழும் வாறுபோ லித்தாரணியிற், றூற்றி யொழியும் வாழ்வதனைத் துறந்தமேலோர் மீதொரு வன், றூற்றிக்கூறும் வசைச்சொற்கள் சொன்னேன் மீதே தோயுமால்.

என்பதற் கிலக்கியமாய்ப் பாபத்தை வளரச் செய்வதாம். இன்னும் நவீன நாகரிகர் பலர், ஸ்திரீ கள் உடல் வலிமைபெற உதை பந்தாட்டம், சல்லடை பந்தாட்டம், மரச்சட்ட பந்தாட்டம் முதலிய விளை

யாட்டுக்களைக் கற்றுக்கொடுப்பது,விபரீத உணர்ச்சிக்கு வழிகாட்டியேயாமென்பதை உணர்கிலர். அணங்கிகளுக்குத்தேகபயிற்சி கிரககிருத்தியங்களாகியஜலங்கொண்டு வரல், மாவிடித்தல், இயந்திரமரைத்தல், பாத்திரந்துலக்கல், வீடுமெழுகல், விசேஷகாலங்களில் கும்மியடித்தல், வீட்டிற்குள் தோழிமார்களுடன் கோலாட்டம் போடுதல், கழங்காடல், முதலியவைகள் போதுமானவையாயிருக்க, மற்றொன்றைப் பின்பற்றி யிடர்ப்பட்டுழல்வானேன்? நம்முதியோர் ஸ்திரீகளுக்குவிதித்துள்ள தேகப்பயிற்சி உருவழகும், மேனியழகும் ஓங்கச் செய்யும். மேனாட்டுத் தேகப்பயிற்சியோ சதையைக் கொழுக்கச்செய்து அதனால் பல துன்பங்களுக்குட்படுத்தி வியாதியைக் கிளப்பிவிட்டு (மேனாட்டு வைத்தியத்தில் தேர்ந்த) டாக்டர்களை வரவழைத்துக் கொண்டே யிருக்கும். இதற்கு அத்தாட்சி வேறே வேண்டாம். செல்வவந்தர் வீட்டுப் பெண்களுக்கே டாக்டர் சென்றுவருவது போதிய சான்றும். அயல் நாட்டுவழக்க ஒழுக்கங்களைச் செல்வவந்த ஸ்திரீகளும், ஏனையரும் பின்றொடர ஆரம்பித்தநாள் முதற்கொண்டு காலையில் எழுவதைத் துறந்தனர். கணவர்களுக்குச் செய்யும் மரியாதையை மறந்தனர். பாலர்களைப் பரிபாலிக்கும் பான்மையை விடுத்தனர். சமையல் செய்வதை வெறுத்தனர். ஏனெனில் தொழில்கள் யாவும் வேலையாட்களைப் பொறுத்திருக்கின்றன. நீராட்டுவது யார்? பாலூட்டுவது யார்? பலகாரங்கள் செய்வது யார்? காபி, டீ, கொக்கோ போடுவது யார்? அட்டிற்றொழில் செய்வது யார்? சயன அறையைச் சிங்காரிப்பது யார்? யாவும் வேலைக்காரரன்றோ? ஆயின்

இல்லறத்திலளித்த சுதந்திரத்தை வெறுத்த இந்த ஸ்திரீகளுக்கு வேறு வேலைகள் தான் என்னே? உறக்கத்தை விட்டெழுந்து தந்த சுத்தி செய்து யாதோ சில பலகாரங்களை யுண்டும் பல வர்ணபட்டாடைகளால் தம்மையலங்கரித்துக் கொண்டும், நெற்றியின்கண் திலகந்தீட்டிக் கொண்டும், பல ஆபரணங்களைப் பூண்டுகொண்டும், அல்லாசாமி பண்டிகைகளில் சில தப்பிலிகள் மூஞ்சிகளில் சாம்பரடித்துக்கொள்வது போன்று ப்ளாஸம் பவுடர் என்ற வெண்ணிறப் பொடியை வாரியப்பிக்கொண்டும் இன்றைக்கு துவிசக்கரத்தின்மீது செல்லலாமா? நவீன வண்டிகளில் ஏறிச் செல்லலாமா? இந்தத் தெருவினூடே சென்று அந்தத் தெருவின் வழியே வரலாமா? ருக்மிபாய், ராமாபாய் முதலிய கற்பினின்று நீங்கிய மாதர்கள் பிரசங்கத்திற் கேகலாமா? அல்லது நாவல்கள் வாங்கக் கடைக்குச் செல்லலாமா? ஆடவர் கூட்டங்களுக்குச்சென்று அவர்களை மகிழ்விக்கலாமா? கோச்சு வண்டியிற் சென்று மாலையில் பீச்சுக்கு வருமாறு அன்பர்களுக்குப்போய்க் கட்டளையிட்டு வரலாமா? யார் வீட்டுக் கேகலாம்?யாருடன் உரையாடலாம்?எந்தத் துரையைப் போய்ப் பார்க்கலாம்? என மனம்போனபடி எண்ணி அவ்வாறே இருவேளை(காலைமாலை)யுஞ் சென்று காலத்தைக் கழிக்கின்றனர். மாதர் வயப்பட்டு மதிமயங்கும் பல புருடர்கள் சநாதனமதக் கொள்கைக்குமாறாய் நடக்கும் ஸ்திரீகளைப் புகழ்ந்து, பத்திரிகைகளிலும், புஸ்தகங்களிலும் பிரகடனஞ்செய்து ஆர்ப்பரிக்கின்றனர். இந்நவீன சோலங்களைக் கண்டு வறியார் வீட்டுப் பெண்களும் வீணேவிடுவார்களா?ஏதோ! பாவம் கிடைத்தகொறக்கன்மாவோ, கொழுமாவோ, ஆகியமாவுகளில்

இரண்டொருவாசனைகளைக்கலந்து மூஞ்சிகளில் அள்ளித்தெளித்துக்கொண்டு அச்செல்வவந்த ஸ்திரீகளுடன் கூடிக் களிக்கடலிலாழ்கின்றனர். இவைகளுக்கெல்லாம் காரணம் நம்மாடவர்களே யாவர்கள். நாற்குணங்களையுந் துறந்து ஸ்திரீ வயப்பட்டும், அவர் நடக்கும் ஒழுங்கீனங்களில் புகழ்ந்துகொள்ளும் இவ்வாடவர், ஸ்திரீகளுக்கு இயற்கையாய் அமைந்துள்ள நாணம், மடம், அச்சம், பயிற்பு, ஆகிய நாற்குணங்களையுங் கெடுக்க முற்பட்டுள்ளனர். இத்தகைய செயல்களைக்கொண்ட பேதை மக்களைத்தான் மனத்திலுட்கொண்டவராய்க் கவிச்சக்கிரவர்த்தியாய கம்பரும் [ அயோத்தியா காண்டம் ] கைகேசி சூழ்வினைப் படலத்தில்,

எண்பாலோவாநாண்மடமச்சமிவையேதம்
பூண்பாலாகக் காண்பவர் நல்லார்புகழ்பேணி
நாண்பாலோராநங்கையர்தம்பானணுகாரே
ஆண்பாலாரே பெண்பாலாரோடைவம்மா.

[வலிமையினின்றும் நீங்காத நாண், மடம், அச்சம், பயிர்ப்பு இவைகளையே புகழாக விரும்பித் தம்மாற் பூணப்படும் ஆபரணமாய்க் கருதிக்காண்பவரே பெண்களாவார். நாணம் முதலிய அப்பகுதிகளைக் கருதாதவரிடத்து ஆண்மையையுடையார் சேரார். அவ்வாறு சேருவோர் அப்பெண்பாலாரை யொத்தவர்.]

என்று வலியுறுத்திக் கூறினர். இது நிற்க,

எத்தனை அயல்நாட்டு மாதர்கள், ஹிந்து ஸ்திரீகள் நடித்துக் காட்டுவதுபோல் காலில் பூட்சுடன் சேலைகளை யுடுத்துக்கொண்டு தங்கொள்கைகளை நிறுவ ஆரம்பித்துள்ளனர். ஹிந்து மதத்தில் ஆழ்ந்த நம்பிக்கையினால் அம்மதத்தையே நிலைநாட்ட வந்தவர்கள்

போலும் பாசாங்கு செய்துழல்கின்றனர். மஹாத்மாக்களைக் கண்டுணர்ந்தவர்கள்போலும் பொய்ம்மொழி கூறி, பெரும்பாலும் (நம்) ஆடவர், ஸ்திரீகளை தம் வயப்படுத்த மானைக்காட்டி மானையீர்ப்பதுபோல் மூவாசை யென்னும் தூண்டிலைப்போட்டுமயக்கித் தங்கொள்கைகளைப்பரப்புகின்றனர். என்னே!ஸ்திரீ சுதந்திரம்! பளாபளா!நன்று!நன்று!ஸ்திரீசுதந்திரம் என்றுபேசும் ஆடவர் பலர் சுந்தரத்திலீடுபட்டவர்களாய் நிற்கின்றனர்!ஆகையால் ஜாக்கிரதை! ஜாக்கிரதை! பரதகண்டத்தின்மகிமையைக்கெடுத்துவிடாதீர்கள்!உயர்தரக் கல்வி பெற்ற ஆடவர் பலர் தற்காலம் கெட்டுழலும் செய்கையே போதும்! விரிக்கிற் பெருகும். இவற்றையெல்லாம் சீர்திருத்துவதைவிட்டு புறத்தேயுள்ள வழக்கமில்லா வழக்கத்தைப் பின்றொடரச்செய்வது வாலிழந்த நரியைப் பின் பற்றுவதை நிகர்க்கும்.

இனிப் "பெண் கல்வி"யைப் பற்றி வாதிப்போம். கல்வி-என்பது கல் பகுதியாகவும், வி-தொழிற்பெயர் விகுதியாகவுங்கொண்டு, கல்லுதல்—தோண்டுதல் என்னும் பொருளைப்பயக்கும். எதைத் தோண்டுதல் என்னுங் கேள்வி பிறக்குமிடத்து அஞ்ஞானத்தைத் தோண்டுதல் என விடையேற்படும். அஃதொழிய ஞானம் முதிரும் அக்கருத்தை யமைத்துத்தான் 'அறம் பொருள் இன்ப வீடடைதல்' நூற்பயனே யென்றார் பெரியாரும். கல்வி, கற்பு என்பவைகள் ஒரு பொருளைத்தருஞ் சொல். அவ்வாறாயினும் மாதர்களைப் பற்றிக் கூறுமிடத்து, கற்பு என்னுஞ் சொல்லே இலக்கியங்களில் வழங்கப்பட்டுள்ளது. ஈண்டுக் 'கற்பு' என்னும் சொல் பல பொருளையும் அடக்கியுள்ளது.

பண்டை நூலாகிய தொல்காப்பியத்தில் அதன் ஆசிரியரும்,

"கற்பெனப்படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினர் கொடுப்பக் கொள்வதுவே"

என்றார். அதற்கு உரையாசிரியராகிய உச்சிமேற்புலவர் நச்சினார்க்கினியரும்:—கற்பொழுக்கமாவது, கணவனைவிட வேறு தெய்வமில்லை யெனவும் அவனை இன்னவாறே வழிபடுகவெனவும், தாய் தந்தையரும் அந்தணரிடத்தும், பெரியோரிடத்தும், ஆசிரியரிடத்தும், தேவரைச் சுட்டியும் இன்னவாறு நடந்துகொள்கவெனத் தலைவனுங் கற்பித்தபடி தலைவி இல்லறம் நடத்தும் முறையாம். இன்னுங் கலியாணச் சடங்கு நடக்குமிடத்து இவளை இன்னவாறே பாதுகாப்பாயெனக் கணவனுக்கும், இவற்கின்னவாறே பணிவிடைசெய்யக் கடவாயெனக் காதலிக்கும் அங்கியங்கடவுள் சாட்சியாக மந்திரவகையால் கற்பிக்கப்படுதலின், அது கற்பெனப்பட்டது என்று சுருங்கச்சொல்லி விளங்க வைத்துள்ளார். மணற் கேணியைத் தோண்டுந்தோறும் நீரூற்றுண்டாவதுபோல் மாந்தர் கற்குந்தோறும் அறிவு விருத்தியாவது இயல்பே. இஃது ஆடவராயினுஞ்சரி பெண்டிராயினுஞ் சரி, அறிவு விருத்தி எவருக்கும் மறுக்கற்பாலதன்று. திருவள்ளுவர் "விலங்கொடு மக்களனையரிலங்குநூல், கற்றாரோ டேனையவர்" என மக்கள் என்னும் பொதுச் சொல்லை வழங்கி இருபாலரும் கற்றற்குரியாரென நிலைநாட்டி யுள்ளாராயினும் வாழ்க்கைத் துணையில் கிரக தர்மத்தை நிறுவி அதன்மேல் "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந் திண்மை யுண் டாகப் பெறின்" என வலியுறுத்திக் கூறு

இன்றாதலின் கற்பென்னுந் திண்மை யுண்டாகுமாறு கல்வியை யளித்தல் வேண்டும். 'பெண் கல்வி'யை நிலைநாட்டுவதற்குப் பலர் கலைமகளே பெண் வடிவினள் என்னும் வெற்றுரையைப் புகுத்திப் பெண் கல்வி கூடாதென்று கூறுவோர் கசடரெனப் பெரியோரை வீணே யிழித்துரைப்பர். அங்ஙனம் இகழ்தல் அறியாமையே. பெரியோர் 'பெண் கல்வி' வேண்டாமென்று கூறிற்றிலர். கல்விக்கு உபலட்சணமாய்ப் பெண்ணுருவாய்க் கூறப்பட்ட சரஸ்வதியைக் கேவலம் நிலவுலகத்துழலும் புழு நெளிந்து புண்ணழுகும் சரீரமாய்க் கருதி யுரைப்பது அஞ்ஞானமே என்பர். அவ்வாறு கொள்வது, மலைமகள் மணாளனே பாம்பாட்டியாய் வேடம் பூண்டாரென்று மானிடரெல்லாம் பாம்பாட்டியாய் உருக்கொண்டு பாம்பாட்டியின் தொழிலை ஏன் செய்யக்கூடாதென ஒரு புத்திசாலிகூறின் அவனை எவ்வளவு மதிப்போமோ அத்தகையக்கூற்றும் போலுமாம். இன்னுஞ் சிறிதுகாலஞ் செல்லின் சரஸ்வதி யார்? என்று வினாப் பிறக்கும். பிரம்மாவின் பெண் என்று விடை தானாகவே உண்டாகும். அப்பொழுது பிரம்மா பெண்ணின்பேரில் காதல் கொண்டார்; பெண்டாட்டியாகக்கொண்டார் என்று தாங்களே அதன் உட்பொருளை யுணராது சமாதானஞ் செய்துகொண்டு உலகினர் ஒழுகுமாறு ஒரு திருத்தம் கொண்டு வருவார் போலும்! கொடிது! கொடிது! ஆத்திரக்காரர் அவசரப்பட்டுப் பொருள் கொள்ளாமல் பிரம்மா சூக்ஷ்ம விஷயங்களுக்கு அதிதேவதையா யிருத்தலின் மகிமையையும், வாக்கிற்கு அதி தேவதையா யிருக்கும் கலைமகளின் தன்மையையும், அர்த்தத்திற்கும் வாக்கிற்குமுள்ள அந்நியோன்னியத் தன்மையையும் வேதாந்தி

கள்பால் கேட்டுக் குறுகிய புத்தியை நீக்கி நல்வழியிற் செல்வாராக. தற்காலத்துக் கல்வி பெண்டிற்கேற்ற கல்வியாயிராமல் சுதந்திரவரம்பைமீறி யிருத்தலின் பெரியோர் "ஆர்கலியுலகத்து மக்கட்கெல்லாம் ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கமுடைமை" என்பதைக் கைக்கொள்ளல்வேண்டுமென்பர். கல்விப் பயிற்சியின்றி சத் பயிற்சியுள்ள பெண்கள் எஞ்ஞான்றுங் குற்றத்துக்குள்ளாகார். ஆயின் கல்வி எவ்வாறிருத்தல் வேண்டும்? வீட்டுக்காரியங்களைச் செய்யவும் பழைய நற்சரித்திரங்களையும், அறிவுக்குறும் ஆசாரபரம்பரையான ஒழுக்க நூல்களைக் கற்றறிந்து அநுபவத்தில் கொள்ளவும், தங்கள் மக்களைத் தீமையினின்று நல்வழியிற் படுத்தவும், ஆகிய முதலியனவற்றைப் பழக்குமாறிருத்தல் வேண்டும். கற்றலைக் காட்டிலும் கேட்டல் சிறந்தது. கற்றோர் பிறர்க்குச் சொல்லப் புகுங்கால், தாம் பல தடவை பல நூல்களில் கற்றவைகளின் சாரத்தைச் சொல்லுகின்றனர். ஆகையால் கேள்விச் செல்வத்தால் அறிவு தெளிவடையும். அதைக் கொடுப்போர் எவ்வாறிருத்தல் வேண்டும் என்பார்க்கு, வள்ளுவனர் "இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே, யொழுக்க முடையார் வாய்ச் சொல்" என்று கூறினர். அதற்குப் பரிமேலழகர் கல்வியுடையவராயினும் ஒழுக்கமில்லார் அறிவிலராதலின், அவர் வாய்ச்சொற் கேட்கக் கூடாதென்பது தோன்ற "ஒழுக்கமுடையார் வாய்ச்சொல்" என்று உரைவகுத்துள்ளார். காரணமென்னை? மனமானது நீரைப்போன்றது. நீர் இயற்கையில் யாதொரு சுவையும் நிறமும் நாற்றமுமில்லாமல் எவ்விதத்தி லூறுகின்றதோ அவ்வித நிலத்தின் சுவை, நிறம் நாற்றங்களைப் பெறுகின்றது. அதுபோல 'இடிப்பது

சிவன் கோவில் ஓதுவது வேதாந்தம் கவர்வது அயலார் மனைவி' என்பதற்கேற்ப மாறுகொண்ட நடத்தையுடையார் வாய்ச்சொல்லைக் கேட்போர், அத்தகைய குணங்களையடைய வேண்டியவர்களாய் விடுவர். இதற்குச் சான்றாக ஈண்டு ஒருகதையை நிகழ்த்துவாம்:—

ஒரே கிளி வயிற்றில் இரண்டு குஞ்சுகளிருந்தன. ஒன்று வேடுவனிடத்தும் மற்றொன்று ரிஷியாச்சிரமத்தினிடத்தும் இளம்பருவந்தொட்டு வளர்ந்து வந்தன. ஒரு சமயம் ஓர் அந்தணன் அவ்வேடுவன் வீட்டு அருகாமையிற் போயினன். அத்தருணம் இவ்வந்தணன் செல்வதைக்கண்ட அக்கிளி "ஓய் வேடர்களே! நீங்களேன் உறங்குகின்றீர்கள்! இதோ ஒரு கொழுத்த பார்ப்பான் போகின்றான்! அவனைக் கொல்வித்தால் ஆறுமாதம் சுகமாய்க் காலத்தைக் கழித்தலாகுமே! வில்லெங்கே! அம்பு எங்கே! எழுமின்! எழுமின்! பிடித்துக்கொன்மின்! கொன்மின்! என்று உரைத்தது. உடனே நடுங்கிவிட்டான் பார்ப்பான். பிடித்தான் ஓட்டம்! அச்சமயம் ரிஷியாச்சிரமம் குறுக்கிட்டது. ஆங்குக் களைப்புற்றுக் கீழே உட்கார்ந்தான். உடனே ஆண்டு வளர்ந்துவந்த அக்கிளி ஓய் ரிஷிகளே! சூரியனையும் பழிக்கும் திருமேனியையுடைய ஓர் அந்தணன் யாது காரணத்தாலோ நமது ஆசிரமத்தருகில் களைப்புற்றுட்கார்ந்துள்ளான். விரைவில் அவனை ஆதரித்து உபசரிக்காவிடில் உயிர்க்கே இறுதி வந்துவிடும். சரணமடைந்தவரை ஆதரியாமல் கொன்றவர்களாவோம். அர்க்கிய மெங்கே! பாத்திய மெங்கே! ஆசமனிய மெங்கே! எடுத்துக்கொண்டு விரைவிலோடுமின்! ஓடுமின்! என்று கூறிற்று. பிறகு அவ்

வந்தணன் இவற்றை யெல்லாம் கேட்டவனுயக்களி கூர்ந்து ஓரே இனமாகிய அக்கிளிகளின் குணவேறு பாடுகளைச் சற்றுக்கவனித்து,

ஸம்ஸர்கஜாதோஷகுணாபவந்தி

[நற்குணம் பிறப்பதும் பழக்கத்தாலே துர்க்குணம் பிறப்பதும் பழக்கத்தாலே] என்றான்.

முற்காலங்களில் ஆடவர் பிறரிடத்துப் பல நூல்களைக்கற்றுப் பண்டிதராக ஸ்திரீகள் வழக்கமாய் வீட்டின் கண்ணே யிருந்து கேள்வி வழியில் மிக்க நற்குணம் நல்லொழுக்கம் முதலியவைகளை யடைந்து இல்லறத்திற்கிசைந்த கற்புநிலைதவறாது ஒழுகிப் புகழ்பெற்றனர். இடம், பொருள் ஏவல் மூன்றும் வாய்க்கப்பெற்ற சில குலமாதர்கள் வீட்டின்கண் இருந்தபடியே கணவன் முதலியோர்களிடத்துக் கல்வி பயின்று வருதல் நிகழ்ந்ததுண்டு. ஆனால் தற்காலம்போல் பரபுருடரிடத்தும், ஹிந்து சாஸ்திரவழக்க ஒழுக்கங்களில் மாறுபட்ட அன்னியரிடத்தும், நம்மதவைரிகளிடத்தும், ஹிந்துவைப்போல் போலி நடையுடை பாவனைகளோடு நடிக்கும் ஐரோப்பியரிடத்தும் கல்வி பயின்றாரில்லை. அவ்வாறு பயின்றிருப்பின் கற்பின் குலவிளக்காய் விளங்கியிருத்தலரிதே. எவ்வாறு பயின்றுள்ளாரென்பதை உதாரணமாய்க்காட்ட மஹாபாரதம் வனபர்வம் 32-வது அத்தியாயத்தில்:—'எனது தகப்பன் முன்னொரு சமயம் பண்டிதரான பிராமணரைத்தனது வீட்டில் வைத்துக்கொண்டு எல்லா தர்மங்களையுங் கேட்டார். பிறகு அப்படிப்பட்ட பிரகஸ்பதியின் நீதிகளை எனது சகோதரர்களுக்குக் கற்பிக்குமாறு செய்தார். அத்தருணம் நான் தகப்பன் அருகாமையி லிரு

ந்து அவர்களுக்குச் சொல்லுவனதைக் கேட்டேன்" என்று சொல்லப்பட்டுள்ளது. ஆயின் வீட்டில் கல்வி போதித்தற்குரியாரும் கற்புநெறி தவறாது காத்தற் குரியாரும் யாரெனின், தந்தை தாயர் கணவன், கணவனுடன் பிறந்தவன், மாமன், முதலியவர்களே யாவர். இம்முறை நெறி பிறழ்ந்தபடியால் 'பெண் கல்வி' அபிவிருத்திக்கென்று அறிஞர் பலர் பெண் பாடசாலை யேற்படுத்த முயன்றனர். ஆத்மசுத்தி அளியாததும் ஜீவனம்ச பாஷையெனக் கருதப்படுவது மான ஆங்கிலேய பாஷையை ஆட்டிகளுக்கும் போதிக் கின்றனர். தேசபாஷையை அறவே யொழித்தனர். சப்தமுறையற்ற கல்விகளெல்லாம் கற்குமாறு செய்விக் கின்றனர். அநாசாரம் பரவுவதற்குரிய வழிகளையெல் லாம் சிறிது சிறிதாக ஏற்றுகின்றனர். வைத்யம், பாக சாஸ்திரம், முதலியவைகளில் ஞானம் பெறுதல் அவ சியமேயாயினும், பாகசாஸ்திரம் வீட்டில் பழக்கினு லன்றி பள்ளியிற் கற்பித்தல் முறையன்று. பள்ளிக் கணக்குப் புள்ளிக்குதவாது என்பது பழமொழி. வீட் டுப்பழக்கம்பெற ஏட்டுப்படிப்புச் செல்லாது. ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவுமா? பெற்றோர் பள்ளிக்கூடத் திற்குப் பெண்களை வயது வரையறுப்பில்லாம லனுப்பு கின்றனர். பிராமணர் பெண்களாயினும் ஏனைய வகுப் புப் பெண்களாயினும் மங்கைப்பருவமடையும் வரை யில் பள்ளிக்கூடத்துக்கல்வியை ஒழுக்கமுறையாய்க் கற் பிப்பின் பெற்றுக்கொள்ளலாம். பிறகு இல்லத்தி லிருந்துகொண்டே அறிவை விசாலப்படுத்திக் கொள் வதுதான் முறை. அதைவிட்டு மங்கைப்பருவமுற்றப் பிறகுங்கூட மாதர்களைக் கலாசாலையி லனுப்பும் ஆபாச வழக்கத்தை யவலம்பித்து வருகின்றனர். அஃதொன்று

தானே ? இன்னும் ஸ்திரீகள் வீட்டுக்குள்ளிருப்பதைப் பார்க்கிலும் ஸ்வேச்சையாய் உத்தியோகசாலைகளிற் சென்று குமாஸ்தாவாகவும், டைபிஸ்டாகவும், பண்டக சாலைகளிற்சென்று பண்டம் விற்பனை செய்பவர்களாகவும், இருத்தல் வேண்டுமென கருதுகின்றவர்களுமுளர். அங்ஙனம் கருதுவோர் வீட்டுக் காரியங்களைக் கணவன் செய்வதாவென்றும், கணவனும் கச்சேரிக்குச் சென்றால், பிள்ளைகள் செய்வதா என்றும் தங்கள் மதியினைக்கொண்டு ஆராய்ச்சிச்செய்து அறியாமற்போனதென்னே ! அறிகிலம். பெண்மணிகள் அடங்குதற் பான்மையரென்றும் இல்லறத்தை நடத்தவேண்டிய கடமை அவர்களைச் சார்ந்ததென்றும் கருதியன்றோ 'இல்லாள்' என்ற பட்டத்தைப் புனைந்தனர். அதற்கு விரோதமாய் அடங்குவது அறியாமையேயென்றும், பெண்மைக்குரிய குணங்கள் அல்லாதவனென்றும், மாறுகொளப்பொருள்கொள்ளல் மிக்கப் பொருத்த முடையதேயாம்.

"நடந்தா ளொருகன்னி மாராச கேசரி நாட்டிற்***
குடந்தா னசைய வொயிலாயது கண்டு கொற்றவரும்
தொடர்ந்தார் சந்நியாசியர் யோகம்விட்டார் சுத்த சைவரெலாம்
மடந்தா னடைத்துச் சிவபூஜையுங் கட்டி வைத்தனரே "எனச்

சாதாரணமாய் குலுங்கும்படி நடந்து சென்ற ஒரு மாதினைக்கண்ட அரசர் முதலியோர் மயங்கினரெனின், வெளியிலேகி வாசிக்கும் மங்கைப்பருவமுடைய மாதர்களைப் பன்னாள் பன்முறைக்கண்டு வார்த்தையாடும் பயிற்சி மிக்குடைய ஆடவர்க்கானுறின் என்னாம் ? அத்தகையர் ஐம்பொறி யடக்கிய அறிஞர்களோ ! உத்தமப் பெண்டிராயினர் மனத்தைத் திடமாக்கிக்

கொண்டு செல்லினும் எவ்வாற்ருனும் தீப்பெண்டிர் ஆடவர் இவர்களிணக்கத்தால் மனத்திண்மை சிதைந் துவிடுமென்பதில் ஐயமின்று. பொய்யாமொழிப் புலவர் "தந்தை மகற்காற்று நன்றி அவையத்து முந்தி யிருப்பச்செயல்" என்றும் "அடிசிற்கினியாளே அன் புடையாளே படிசொற் கடவாத பாவாய்"—என்றும், வற்புறுத்திக் கூறினரேயன்றி அவைக்கினியாளே! யென்று விளித்து மகளேயும் சபாலங்காரமாக்குதல் வேண்டுமென்று கூறினரன்று. என்னே? வடிவத்தில் இயற்கையிலே பெண்மையா யிருத்தலினுலும் பெண் என்ற சொல்லுக்குப் விரும்பப்படுபவள் என்னும் பொருளாதலாலும், 'பெண் என்ருல் பேயுமிரங்கும்' என்னும் தன்மையைப் பெற்றிருத்தலாலுந் தாம் மறைமொழியும் 'கண்டு கேட்டுண் டுயிர்த் துற்றறியு மைம்புலனு,மொண்டொடி கண்ணே யுள' என்று தெற் றெனக் கூறுவதாயிற்று. மழைவளந்தரும் பெண்டிரா யின் ஆடவர் மனம் புகுதாமையன்ருே மரபுடைத்தா கும். பருவமடைந்த மங்கையர்கள் மனம் ஒரு நிலே யுடைத்தின்மையாலும் "பேச்சு பேச்சென்னும் பெ ரும்பூனே வந்தக்கால் கீச்சுகீச் சென்னுமாங் கிளி" என்னும் குரலே மேலிடுவதுபோல், 'நுண்ணறிவோடு நூலோடு பழகினும் பெண்ணறிவு என்பது பெரும்பே தைமைத்தே' என்னுமாறு கல்வி கேள்விகளான் எவ்வ ளவு உணர்ந்திருந்தபோதிலும் தங்கள் இயற்கைக் குண மாகிய மடமை முன்னிற்குமாதலாலும் வெளியிலேகு தல் கூடாவென்கிருேம். பெண்ணென்பது பெரும் பான்மையும் பெருமை யுடையதன்று. ஆயிரமுகங் கொண்டு செல்லும் மனேகதிகளே யுடையது. எண்ணி

பத்தைக் கையின்கண் நல்கின் தேவேந்திரன் மகளே யாயினும் அவள் தீயிடை வெண்ணெயைப்போல் உருகி கற்பென்னும் கலங்காநிலைமை மெலிந்துபோக அவன் வழிபட்டு நிற்பாள் என்று ஆன்றோர் அநுபவத்தில் கண்டு கூறியிருப்பது என்றும் பிழைபடாதென்பதை யுணரக்கடவர். அயல்நாட்டு மாதர்கள் வெளியில்வந்து பல காரியங்களைச் செய்கிறார்களே யென்றால் சிறு பான்மையோர் தவிர பெரும்பான்மையோர் மனம் வலி யுடையதென்று கருதுவோர் அரிதினும் அரிதே. மேல் நாட்டார் விவாகம் யாவும் தர்ம சொரூபத்தை நாடிய தல்ல. விவாகமே பணம், மோகம் இருவகைக்குள் அடங்கி நடந்தேறி வருகின்றது. *எவ்வாடவனாயினும் எந்த ஸ்திரீயாயினும் பணத்திற்கும் மோகத்திற்கு மாய்க்கருதி விவாகஞ்செய்து கொள்ளுகிறோமென்று தீர்மானிக்கின்றார்களோ அத்தகையர்கள்பால் கற்பொழுக்கம் இறுதிவரையில் நீடித்திரா என்பது திண்ணம்.

* ஐரோப்பிய நாட்டில் விவாகஞ் செய்துகொள்ளாமல் வெளியே அலைந்து திரியும் பெண்கள் அதிகமென்பது வெளிப்படை. அத்தகையர்களுடைய மனம்

---

* A man who marries for money or ambition is departing from biological and moral ends of marriage. A woman who sells herself for life is morally on the same level as one who sells herself for a night. Havelock Ellis.

* "The growing proportion of adult unmarried women whose sexual relationships are unrecognised by the state and largeley unrecognised altogether";—A well-known writer.

ஒழுங்குடையதல்ல வென்பதை அநேகர் நன்கு எடுத்துக் கூறியுள்ளார். இன்னும் ஐரோப்பிய ஜாதியிலே பிறந்து ஐரோப்பிய மாதர்களின் நோக்கங்களை யறிந்து (அவர்கள்) மத கிரந்தமாகிய சூசைமா முனிவருடைய திருச் சரித்திரத்தை விளக்க "தேம்பாவணி" என்னும் தலைப்பெயர்கொண்டு 3500-பாக்கள் தமிழ்ப் பாஷையிலேயே நவரசமும் பொருந்துமாறு யாத்த ஜோஸப் கான்ஸ்டண்டி பெஸ்கூி என்னும் பாதிரியார்

"புலையினுர் மனவிணை வளைவில் பொன்னங்காற்
றலையினுர் மனவிணைத் தரித்த பூங்கொடி
கலையினுர் மனவிணை வெளிறு கான்றுக
முலையினுர் மனவிணை முயன்றங் காடுமால்"

என ஸ்திரீகள் மனநிலையைப்பற்றி யறைந்துள்ள தோடும் கற்பின் தன்மையைப் பற்றியும்

"கற்பே யணியென் ருேம்பிமதுக் கரையாங் தண்டார் மாதர் கடம், பொற்பே கணவர் தமக்கலாற் புறத்துப் பயனே பயவாப் போல்"

என வற்புறுத்திக் கூறியுள்ளார். இக்கருத்துப்பற்றியே நம் குமாரகுருபரசுவாமிகள் நீதிநெறிவிளக்கம் என்னும் அரிய நூலில்

எங்தெழின் மிக்கா னிளையா னிசைவல்லான்
காந்தையர் கண்கவர் நோக்கத்தான் — வாய்ந்த
நயனுடை யின்சொல்லான் கேளெனினு மாதர்க்
கயலார்மே லாகு மனம். எனவும்,

பண்டைத்தமிழ்நூலில்,

" தந்தை யாயினும் விழைவிற் றன்னுடனே
யொருவயிற்றிற் சார்ந்தா ரேனும்
மைந்தரா யினுமிகவும் வனப்புடைய ரெனிலவர்மேன்
மடநல்லார்தம் சிந்தை நடந்திடும் " எனவும்

ஸ்திரீயின் நிலைமைகள் விளக்கமாய் விளக்கிக்காட்டப் பட்டுள்ளன. இவற்றையெல்லாம் நோக்காது குடதிசை நாட்டினரைப்போல் கணவராயினும் மாதர்களின் பெற்றோராயினும் தம் மக்களை ஆடவர்கூட்டங்களுக்கும், ஸ்திரீ கூட்டங்களுக்கும், தாராளமாய் அனுப்புகின்றனர். அத்தகையர் யாவும் சுயமத சுயபாஷை ஆராய்ச்சின்றிப்பித்தேறித்திரியும் மாக்களென்றேகூறலாம். ஆயின், நாகரிக நாடு என்று பெருமிதங் கொண்டுள்ள ஐரோப்பிய நாடுகளில் வரையறுப்பின்றி வெளியிலேகும் மாதர்களின் கதி எவ்வாறிருத்தல் என்பதற்கு இப் பயங்கர யுத்தத்தில் கிரேட் பிரிட்டன் ஜனனவிகித குறைவைப்பற்றி வெளியிட்ட அறிக்கையே சான்று. அவ்வறிக்கையை வெளியிட்ட கூட்டத்தார் பின்வருமாறு வெளியிட்டுள்ளார்:—

"[மாதர்கள்]கருப்பமுண்டாகாமல் தடுப்பதற்குத் தாமாகவே பலர் பற்பல முறையைத் தேடுகின்றனர்."

"வயதுசென்றுவிவாகஞ்செய்துகொள்கின்றனர்."

"குதிரை சவாரி முதலிய விஷயங்களில் ஸ்திரீகள் மிகவும் தலையிடுகின்றனர்."

"குறைப் பிரசவத்தை யுண்டுபண்ணுவதற் குரிய மருந்துகள் விற்பதால் சட்டப் பூர்வமாய் அவ்விற்பனையைத் தடுத்தல் வேண்டும்"

" பிரமேக வியாதிகள் அதிகரித்து வருவதால் அவ்வியாதிகளுக்கு ஆதாரமான துன்மார்க்கங்களை யாவரும் கண்டித்தல் வேண்டும்.

"விவாகஞ் செய்து கொள்ளாதவர்களுக்கு வரிவிதித்து அவ்வருமானத்தை ஏழைக் குடும்பங்களுக்கு உபகாரஞ் செய்தல் வேண்டும்"

மேலே எடுத்துக் கண்கூடாகக் காட்டியுள்ள விஷயத்தைத் திருத்தக்காரர் என்று ஆபாஸங்களைப் புகுத்த முன்வரும் நவீன நாகரிகப் பித்துடையவர்களே! மும்முறை நோக்குமின்! மூளையைச்சரியானவழியில் நிறுத்த வழிதேடுமின் ! இத்தகைய இழிதன்மைகளெல்லாம் வராத வாறு கடவுளை வணங்குமின்! பரதகண்டம் இற்றைவரையில் புண்ணிய பூமியெனக் கருதப்படுவதற்கே காரணம் கற்பு என்னும் கருந்தனத்தை மகளிர் கடைப்பிடித்து ஒழுகுவதனுலே யென்று நினைமின் ! முன்ஒரு சமயம் * ஸர்தாமஸ் மன்றோ "இந்தியாவிலுள்ள பிராமண ஸ்திரீகளும், ஏனைய உயரிய ஜாதி ஸ்திரீகளும் கற்பு என்னும்திண்மை கலங்காத வாறு கடைபிடித்துக் காத்துக் கொள்வதுபோல் நம் நாட்டு ஸ்திரீகளு மிருந்தால் மதிப்பிற் குரியவர்களாவர்" என்று பரதகண்டத்தின் கற்பின் மஹிமையை விளக்கி எடுத்துக் காட்டியுள்ளதை மனத்தில் நன்கு பதித்துக்கொண்மின்! இன்னும் பலர் முற்காலத்திலிருந்த ஸ்திரீ ரத்தினங்களாகிய ஔவை, உபயபாரதி, கார்கி முதலியோர்களை ஆதாரமாய் வைத்துக்கொண்டு சங்கங்களுக்கும் நாடகங்களுக்கும், பிரசங்களுக்

---

* Sir Thomas Munro:—

"It will be an honour to the ladies of England if it can be said of them that they are as chaste as the Brahmin women and the Hindu women of the higher classes"

கும் செல்வர். அஃது அவர்களின் ஜீவியத்தை ஒழுங்காய் அறியாமையேயாம். முதலாவது ஔவையார் சரிதையைச் சுருக்கமாய்க் கவனித்துப் பார்ப்போம். ஔவையார் என்பவர் பாணர் மரபினரென ஒருவாறு கொள்ளலாம். இளமையில் விறலியராக ஆடல்பாடல் முதலிய வற்றிலே தேர்ந்து விளங்கியவர். புறநானூறு 89-ம் பாட்டில் விறலியரென்று கூறு மாற்றான் உணர்ந்து கொள்ளலாம். இவர்சரித்திரம் பலர் பற்பலவாறு கூறினும் இயற்கையிலே பூர்வ புண்ணியபரிபாகத்தால் ஞானநிலையையுணர்ந்தவர்; பிறப்புத்தொட்டே பேரின்பத்தை நாடியவர்; அதிலேயே மனத்தை நாட்டியவர், சபைகளிலே ஏகதேசமாய்ச்செல்லநேரிடுங்கால் ஆங்கு அவர் கூறும்செய்யுள் உலகநீதியாயும் அறம், பொருள், இன்பம், வீடு அடைதலைப் பற்றியனவாயும் திகழ்ந்து விளங்கும். ஔவையார் அருளினால் பல அற்புதங்கள் செய்திருக்கின்றனர். கருநெல்லிக் கனியுண்டு நெடுங்காலஞ் சீவித்திருந்தனர். ஔவைக்கு மூத்தவள் என்று பொருள் கூறுவாருமுளர். அதுவும் தவிர சரஸ்வதி அவதாரமு மென்பர் ஒரு சார்பார். அவர் இயற்றியுள்ள நூல்கள் யாவும் அறிவினை வளரச் செய்யுமாறு பல பொருளையு மடக்கியுள்ள வாக்கியங்கள் நிரம்பியுள்ளன. இதனாலேயே அவர் ஸ்திரீ வர்க்கங்களில் வேறுபட்டவர் என்றும், இறைவன் அருளைப் பெற்றுள்ளவரென்றும் துணிவுடன் கொள்ளலாம். ஸ்திரீகளுக்கும் வரையறுப்பு யேற்படுத்திப் பல செய்யுள் புனைந்துள்ளார். அக்காலத்தில்தம் வசமிருந்த கொடைவள்ளலாகிய பாரியின் மகளிருவரையும் முறைப்படி விவாகஞ்செய்ய கபிலர் விரசிங்கோ, இருங்கோவேள்

ஆகிய இருவரிடத்துச் சென்று இம்மகளிருவரையும் மணம்புரிந்து கொள்ளுமாறு வேண்டினர். அவர்கள் மறுத்தனர். உடனே தம்மை யடுத்திருந்த அந்தணர் வசம் அம்மகளிர் நிறையழியாதவாறு காக்க பாதுகாவலில் வைத்துவிட்டுச் சேரநாடுசென்றனர். பிறகு திருக்கோவிலூரையடைந்துமலையமான்தெய்வீக மென்பானுக்கு அவ்விருமகளிரையும் மணம்புரிவித்தனர். சிலர்இரண்டு ஔவை இருந்ததாகக்கொள்வர். அவ்வாறுகொள்வதற்கு ஆதாரங்கள் முறைபிறழ்ந்துள்ளன. இத்தகைய இயற்கையிலேயே முதிர் அறிவையடைந்திருந்த ஔவையாரை சபையில் இக்காலத்தில் நடிக்கும் ஸ்திரீகள் உபமானமாய்க் கொள்ளல் தகுதியல்ல. இளமையிலேயே மூதாட்டியர் இறைவன் அருளாற் காட்டிய அற்புதங்கள் யாவும் செய்ய ஆற்றல் உண்டானுல் உதாரணமாய்க் கொள்ளலாம். அவ்வருள் அடைதல் வேண்டியவழி கிரக தர்மத்தில் நின்று பெற்றுக் கொள்ளலாமே யொழிய வேறு மார்க்கத்தால் முடியாது. இரண்டாவதாக உபயபாரதியின் சரித்திரத்தை உற்று நோக்குவோம்:—

பிரம்மாவானவர் கர்மகாண்டத்தை நிலைநிறுத்த மண்டன மிசிரராக அவதரித்தவர். சரஸ்வதியும் தூர்வாஸரது சாபத்தினுல் மானிட உலகில் தானும் பிறந்து மண்டனமிசரரையடைந்து உபய பாரதி எனப் பெயர் பெற்றனள். அஃதோர் புறமிருக்க, ஸ்ரீபகவத்பாதர் அவர்கள் கர்மகாண்டத்தைக் கண்டிக்க மண்டனமிசிரர் வீட்டுக்குச் சென்றனர். அன்று சிரார்த்ததினம். வியாஸர், ஜைமினி அவர்கள் யாவரும் விஜயஞ்செய்திருந்தனர். தர்க்க சபையில் உபய பாரதியை தலைமை

வகிக்குமாறு தூண்டிப் பார்த்தனர். அப்பொழுது அச் செய்கையை மறுத்தவராய் வெற்றிக்கு அறிகுறியாய் புஷ்பமாலையை யளித்துவிட்டு, கிரகவேலை செய்துகொண்டிருந்தாரேயொழிய அவைத் தலைமை வகிக்கவில்லை. அதற்கு அத்தாட்சியாய்க் கீழ்வரைந்துள்ள வடமொழி சுலோகத்தைக் கண்டுணர்ந்தவர் வாயடக்கம் பூண்பர் என்பதில் ஐயமில்லை.

[illegible]

மூன்றாவதாக, கார்கியின் வரலாற்றை விளக்குவோம்:—கார்கி என்னும் ஸ்திரீமணி பிரம்மவாதினி. ஜனகன் சபையில் யாக்ஞவல்கியரை வேதாந்த விஷயமாய் எல்லா முணர்ந்தவள்போல் இறுமாப்புடன் கேள்விகேட்டாள். அடக்கம் சிறிதுமில்லாத தன்மையாய்ச் சபையில் முன்வந்து கேள்வியைக் கேட்பதைக்கண்டு "சரியான நெறியினின்று பணிவுடன் கேள்வியைக் கேட்பாயாக இல்லையேல் தலைபிளந்துபோம்." என்று சாபமீய்ந்தனர் யாக்ஞ வல்கியர். உடனே பயங்கொண்டவளாய் நடுநடுங்கினர். பிறகு அவளை இரண்டொரு கேள்வியைக் கேட்குமாறு விடுத்து வாயடக்கினர். உடனேசபையைவிட்டகன்றனள். மைத்ரேயி கணவன்பால் வேதாந்த விஷயங்களை யுணர்ந்து கொண்டவள். அவளைக் குறைகூறுவோர் ஒருவருமிலர். ஒரு சாரார்

இவ்வரலாற்றை ஆக்யாயிகை என்பர். எவ்வாருயினுமாகுக; நம் வீட்டினுங்கூட (கிரக தர்மத்தையனுஷ்டித்துக் கொண்டு) மைத்ரேயி, கார்கி மாதிரி கிழம்பழங்களாகிய பிரம்மவாதினிகள் உண்டு. ஆனல் ஈண்டு மேற்கோளாக எடுத்துக்காட்டிய ஸ்திரீமணிகள் உயர்தரக் கல்விக்கும் மேடைப்பிரசங்கஞ் செய்வதற்கும் எவ்வாறு உதாரணமாய்க்கொள்ளல் முடியும்? கிட்டணுகுவதற்குக் கூட யோக்கியதை யில்லாமலிருப் பதையறிந்து அடங்கக் கடவர். இவற்றையெல்லாம் முறையே யறியாது மனம்போனபடி செல்லும் மாதர் பலதீச் செயலுக்குட் பட்டுத் துன்புறுவர். நம்முதியோர்கள் "சிகிச்சையைப் பார்க்கிலும் சிரத்தையேமேல்" என்னும் பழமொழியை யனுசரித்தவராய்,

"தலைமகனிற் றீர்ந்துறைதல் றன்பிறரிற் சேர்தல்
நிலைமையிற் றீப்பெண்டிர்ச் சேர்தல்—கலனணிந்து
வேற்றூர்ப் புகுதல் * விழாக்காண்டல் ஞேன்பிடுதல்
கோற்றொடியாள் கோளழியு மாறு"

என்று பெண்டிர்க்கு ஒரு நிபந்தனையும், ஆடவர்க்கும் அவ்வாறே,

"ஈன்ருள் மகடன் னுடன்பிறந்தா ளாயினுஞ்
சான்ருர் தமித்தா வுறையற்க—வைம்புலனும்
தாங்கற் கரிதாக லான்"

என்றும்,

"தூய்மை மனத்தவர் தோழர் மனையகத்தும்
தாமே தமியர் புகல்வேண்டா—தீமையான்
ஊர்மிகின் இல்லை கரியோ ஒலித்துடன்
நீர் மிகின் இல்லை சிறை"

என்றும் விதித்தனர்.

---

* கணவனு மதியின்றி மனம் போனபடி தானேசெய்தல்.

முற்காலத்திலிருந்த சில ஸ்திரீரத்தினங்கள் கற்பின் மகிமையால் சொல்லொணு பல அற்புதங்களைச் செய்துள்ளனர். எவளொருவள் "தெய்வந் தொழாஅள் கொழுநற் றெழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை" என்னும் குறள் வாக்கியத்தைத் திரிகரணத்துடன் உறுதியாய்க் கைப்பற்றி யொழுகுகின்ருளோ அப்பொழுது மனத்தெளிவு உடனே உண்டாய்விடும். மனத்தெளிவுண்டானவுடனே எல்லாப் பொருளையும் அறியும் ஆற்றல் தானுகவே உண்டாகும். அதனுல் தான், "மாசற்ற கொள்கை மனத்திலடைந்தக்கால், ஈசனைக்காட்டுமுடம்பு" என்றனர் ஆன்ருேர். மத்திரதேசத்து மன்னவனுகிய அச்வபதியின் மகள் சாவித்திரி காலனைக்கண்டு சத்தியவானின் உயிரை மீட்டது கற்பின் றன்மையன்ருே! குஷ்டரோகியைக் கணவனுயடைந்த நளாயினி கணவனிடத்து நடந்துகொண்ட முறைமையினுல் மாண்டவ்யர் என்னும் ரிஷி "இன்று சூரியோதயமானதும் நீ மாங்கல்யத்தை யிழக்கக் கடவாய்" என்று கடிந்துசொன்ன சாபத்தை "சூரியோதயம் ஆகாதவாறு இருக்கக் கடவது" என்று மறு சாபமளித்தது கற்பின் றன்மையினுலன்ருே? தமயந்தி வேடனை எரித்தது கற்பின் ஆற்றலன்ருே! கணவனை யுபசரித்துக்கொண்டுவந்த ஒரு ஸ்திரீ, கௌசிகமுனி மரத்தடியில் உட்கார்ந்திருக்குங்கால் கொக்கு எரித்த விஷயத்தை எடுத்துக்கூறியது கற்பின் வன்மையன்ருே! ஆராய்ந்து பார்த்தாலும் ஒரு ஸ்திரீயாவது வெளியிலேகி மனம்போனபடிசெல்லுவதால் அறிந்தேனென்று கூறினுளில்லை. பாரதத்தில் குணி என்னும் ஒரு மஹரிஷியின் புத்திரி, ஞானத்தின் வன்மையால்

ஸ்திரீகளுக்கேற்பட்ட இல்லற வரம்பைத் தாண்டி அநேக வருடங்கள் தவம்புரிந்தும் பலனடைய முடியாது துன்புற்றுழலாநிற்க, அக்காலையில் நாரதர் தோன்றி * விவாகஞ்செய்து இல்லறமூலமாய்த்தான் அடைதல் தகுதியென்று அவளிடம் சொல்ல, அவ்வாறே செய்தாள் என்று சொல்லப்பட்டுள்ளது. அவ்வாற்றல் மிகுந்த ஸ்திரீக்கே வரையறுப்புண்டானால் நம் ஸ்திரீகளுக்குக் கிரக தர்மத்தை யனுஷ்டியாது வெளியிலேகுதல் விபரீதச்செய்கைக் குட்படுத்துமென்பதை யாம் மீண்டும் கூறல் வேண்டுமோ? சொல்லாமலே விளங்கலாம். நிற்க,

பெரியோர் இல்லறத்தை "ஸம்ஸார சாகரம்" என்பர். என்னை? கடலில் மேடு,பள்ளம், சுழல், நீரோட்டம், அலை முதலிய பலவுள்ளன. அதுபோல, இல்லறமாகிய கடலிலும் அவ்விடையூறுகள் பலவுள்ளன. அவற்றை அநுபவத்திலறிந்துகொள்வர். மிகைபடுத்திக் கூறல்வேண்டாம். ஆகையால் ஸம்ஸார சாகரத்தில் சஞ்சரிக்க நமக்குக் கப்பலாயுதவும் பெண்களுக்கு வழிகாட்ட அறிவென்னும் மாலுமியில்லாவிட்டால் நற்பழக்கம் படியாவாம். முன் சுற்றிலும் நற்பழக்க வாசனையாயும், வீட்டுப்பழக்கம் வைதீக சம்பிரதாயமாயும் ஒழுகிவந்தனர். இக்காலத்தில் பல ஒழுக்கங்கள் தடுமாறவே துர்ப்பழக்கம் தூர்த்துக்கொண்டு

---

* 𑌤𑌪𑌃 𑌪𑌰𑌮𑌕𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾
𑌨 𑌤𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌃 𑌸𑍍𑌵𑌯𑌾𑌜𑌿𑌤𑌾𑌃 ।
𑌅𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌾𑌯𑌾𑌃 𑌕𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌃
𑌕𑍁𑌤𑍋 𑌲𑍋𑌕𑌾𑌸𑍍𑌤𑌵𑌾𑌨𑌘𑍇 ॥

கடையில் ஸ்திரீகளைச் சரணமடைந்தது. இப்பொழுது நற்பழக்கம் நத்தையூர்வது போல் நகர்ந்து போகின்றபடியால் பெண்டிர்க்குக் கணவனும், தாய் தந்தையர்களும் போதிப்பதில் ஆசாரமுறை தவறுதிருத்தல் வேண்டும். அவ்வகையான முறைகளை எம்மாது உடைத்தாயிருக்கின்றாளோ அவளே உத்தம ஸ்திரீ ரத்தினமென்று உலகம் துதிக்கும். பெரும்பாலும் ஸ்திரீகள் கல்வியை விருத்தி செய்வதற்கென்று சிற்றின்பகற்பனு கதைகளை வாங்கி வாசிக்கின்றனர். அவ்வாறு வாசிப்பது பெரும் பேதைமையேயாம். பேரின்பத்தை விளைவித்து மோட்ச கரையிற்சேர்த்து விடுமென்ற அஞ்ஞானத்தினுலோ, அல்லது நாடகாலங்காரத்தில் கொண்ட ஆர்வத்தாலோ, அல்லது எக்காரணத்தாலோ, கற்றறிந்த அறிவினர்களால் நற்போதத்தைக் கொடுக்கும் வண்ணம் கற்பனு நடையில் எழுதப்பட்ட நற்சரித்திரங்களைவிட்டு, பெரும்பான்மையும் சிற்றின்பத்தைச் சிறிது சிறிதாகப் பெருக்குவதாயும் புத்தக நாமதேயமும் சிற்றின்பப் பெயராயும், நடையும் சிற்றின்ப நடையாயும் எழுதப்பட்டுள்ள அவலச் சுவடிகளை வாசிக்க மேற்கொள்ளுகின்றனர். அப்படிப்பட்டவைகள் அதிபாதகத்தை விளைவிக்கத் தூண்டுகோல்களா யிருப்பதால் பெண்மக்களுக்குக் கிட்டா வண்ணம் விலக்கக்கடவர். * "நூல்வழியே வந்தமறை நீக்கிக் காமநுழை வழியாங் கதை பலவும் சுருதி யென்று" கொண்டு அவைகளைப் படிப்பதினுல் மனம் மாறுதலையடையு

---

* "சாஸ்திர வழியே வந்த வேதசாரத்தைக் கைவிட்டு, காமமயக்கம் நுழைவதற்கு வாசலாகிய பல கதைகளையும் வேத(சார)மென்று கொள்ளல்" என்பது பொருள்.

மென்பதில் யாதொரு ஐயமுமின்று. ஆனல் பாரதத்தினுடைய சிறப்பென்ன! இராமாயணத்தினுடைய இரசமென்ன!! அற்புதத்தன்மை வாய்ந்த நாயன்மார்கள் கொண்ட ஒழுக்கமென்ன!! ஆழ்வாராதிகளின் ஆழ்ந்தகருத்தென்ன!! நமது ஆசாரியர்கள் கொண்ட ஆசாரமுறைமை யென்ன! நளாயினி, தமையந்தி, திரௌபதி, சாவித்திரி முதலியோர் கொண்டவிரத சீல ஒழுக்கமென்னென்ன!! என்பவைகளை ஒவ்வொரு மாதரும் நன்கு ஆராய்ந்து பழக்கத்தில் கொண்டு வருதலினுல் கணவனைவிட வேறு தெய்வமில்லை; விரதநோன்பில்லை; கோயிற்குளமில்லை; எல்லாச் சிறப்பும் நாதனன்றி வேறொன்றில்லை; நாதன் நமனுக்கிரையாயின போதே எனக்கு நாதம் போய்விட்டதெனவும்; என் கணவன் நீங்கிய போதே என்காதல் நீங்கியதெனவும்; கொண்டவன் நீங்கிய போதே என் கொண்டையும் கலைந்ததெனவும், மகிழ்நன் மாண்டபோதே என் மஹிமையும் மடிந்ததெனவும், உயிர்போய் உடலிருப்பதினும், பதிபோய் பாரியாள் வாழ்ந்திருப்பதிலென் எனவும், முதலிய உலகியலறிவோடும் வைராக்ய சிந்தனையையுமடைந்து நல்வழியிற் செல்வர். அவ்வாறின்றி அயல்நாட்டினர் போல் நடிப்பர்களேயாயின், காதலனும் காதலியும் ஆகிய இருவர் பால் வளர்ந்தோங்கி வரும் அருங்குணங்கள் அகன்று,

* "அன்பு மில்லன வெனதுன தென்பதி லார்வ
நண்பு மில்லன வஞ்சனை கற்கலா னன்னூல்
பின்பு மில்லன தீயவை யினிதெனப் பெட்டற்
கின்பு மில்லன விச்சையால் வறுமை யுள்ளதுவே"

---

* [அன்பும் சிறிது மில்லனவாகி, இது என்னுடையது உன்னுடையது என்று ஒருவரோடொருவர் சண்டையிடுவதி

என்னுந் தன்மையை யடைந்து துக்கப்படுவதோடு நில்லாது, இற்றைநாள் வரையில் பாரதகண்டத்தில் நிலைகுலையாது மேன்மையுற்றோங்கிய "ஸ்திரீ தர்மம்" கீதையில் அர்ச்சுனன் சொல்லியவாறு அழிவுறும். அவையாவன:—

𑌕𑍁𑌲𑌕𑍍𑌷𑌯𑍇 𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌕𑍁𑌲𑌧𑌰𑍍𑌮𑌾𑌸𑍍
𑌸𑌨𑌾𑌤𑌨𑌾𑌃 । 𑌧𑌰𑍍𑌮𑍇 𑌨𑌷𑍍𑌟𑍇 𑌕𑍁𑌲𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌮𑌧𑌰𑍍𑌮𑍋𑌽𑌭𑌿
𑌭𑌵𑌤𑍍𑌯𑍁𑌤 ॥

𑌅𑌧𑌰𑍍𑌮𑌾𑌭𑌿𑌭𑌵𑌾𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌣 𑌪𑍍𑌰𑌦𑍁𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌕𑍁𑌲
𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃 । 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌷𑍁 𑌦𑍁𑌷𑍍𑌟𑌾𑌸𑍁 𑌵𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑍇𑌯 𑌜𑌾𑌯
𑌤𑍇 𑌵𑌰𑍍𑌣𑌸𑌂𑌕𑌰𑌃 ॥

𑌸𑌂𑌕𑌰𑍋 𑌨𑌰𑌕𑌾𑌯𑍈𑌵 𑌕𑍁𑌲𑌘𑍍𑌨𑌾𑌨𑌾𑌂
𑌕𑍁𑌲𑌸𑍍𑌯 𑌚 । 𑌪𑌤𑌨𑍍𑌤𑌿 𑌪𑌿𑌤𑌰𑍋 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾𑌂 𑌲𑍁𑌪𑍍𑌤
𑌪𑌿𑌣𑍍𑌡𑍋𑌦𑌕𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 ॥

𑌦𑍋𑌷𑍈𑌰𑍇𑌤𑍈𑌃 𑌕𑍁𑌲𑌘𑍍𑌨𑌾𑌨𑌾𑌂 𑌵𑌰𑍍𑌣
𑌸𑌂𑌕𑌰𑌕𑌾𑌰𑌕𑍈𑌃 ।
𑌉𑌤𑍍𑌸𑌾𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌜𑌾𑌤𑌿𑌧𑌰𑍍𑌮𑌾𑌃 𑌕𑍁𑌲𑌧𑌰𑍍𑌮𑌾𑌶𑍍𑌚
𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌾𑌃 ॥

---

ணால் அன்போடு கூடிய நட்பின் தன்மையுமில்லனவாகி, வஞ்சனை கற்பதால் நல்ல நீதிகளை யளிக்கும் நூல்களைக் கற்பது பிற்காலத்தும் இல்லனவாகி, தீமையை யளிக்கும் தொழிலாகிய பாவங்களையின்பமென்று விரும்புவதனால், நல்ல இன்பங்களும் இல்லாதனவாகி, மிகுந்த பணவாசையால் தரித்திரமே வேரூன்றியது.]

உத்ஸந்நகுலதர்மாணாம் மநுஷ்யாணாம் ஜநார்த்தந | நரகே நியதம்வாஸோ பவதீத்யநுசுச்ரும ||

["குலநசித்தால் அநாதியாயுள்ள, அக்குலாசாரங்கள் நசிக்கும். ஆசாரம் நசித்தால் குலமுற்றும் அநாசாரம் வியாபிக்கும். அநாசாரம் வியாபித்தால் குலஸ்திரீகள் பழிப்பினை யடைவார்கள். ஸ்திரீகள் பழிப்படைந்தால் ஒரு ஜாதியோடு மற்றொரு ஜாதி கலக்கும். ஜாதிக்கலப்பு குலமழிவதற்கும், குலத்திற்கும் நரக வேதுவாகும். குலத்தை யழித்தவர்களில் பிதிரர் பிண்டோதக கிரியைகளை யிழந்து கேடடைவார்கள். ஜாதி கலப்புண்டாகும்படிச் செய்த குலத்தைக் கெடுத்தவர்கள் பாபங்களாலே அநாதியா யிருக்கின்ற ஜாதி யாசாரங்களும் குலாசாரங்களும் அழிந்துவிடும்"]

ஆகையால், சான்றோர்களே! இனிமேலாவது காரிகைகள் கற்புக்குப் பங்கமின்றி இன்னவாறே நடத்தல் வேண்டுமெனவும், விருந்தினர், உறவினர் முதலியவர்களை இன்னவாறே ஓம்பல் வேண்டுமெனவும், மஹரிஷிகள் விதித்துள்ள உரிமையின்படி இன்னின்னவாறே யொழுகல் வேண்டுமெனவும், அறிந்து நடப்பார்களேயாயின் இந்நிலவுலகம் பல்வளங்களாலும் மேன்மையுற்று விளங்குவதோடு முக்தியடையு மார்க்கத்தையுமளிக்குமென்பது திண்ணம்! திண்ணம்!! திண்ணமே!!!

ஓம் சுபம்.

முற்றிற்று.

## *புருஷபக்தி.

இராகம் - நாதநாமக்கிரியை - மிசிரதாளம்.

கண்ணி.

மதியிது, மதியிது, பெண்ணே - புண்ணிய
வதியல்லவோ நல்ல மகராசி? கண்ணே.

புருஷன்மேலொழியாத பத்தி—உள்ள
தருமதேவதைக்கல்லோ சகலமுஞ்சித்தி (மதி)

கர்த்தாவே முதல்தெய்வம் மானே-பின்பு
பர்த்தா வல்லாலுண்டோ பாக்கியம்? தேனே! (மதி)

துரைமகளானாலும் பாரி—கொண்ட
உரியவனுக்கவ ளூழியக்காரி (மதி)

காதலன் பட்சமே லட்சம்-குணம்
ஏதுமில்லாதவ ளெட்டி விருக்ஷம் (மதி)

ஆவித்துணைவன்மேற் கோபம்-செய்யும்
பாவியைக் கண்ணாலே பார்த்தாலும்பாபம் (மதி)

புருஷன்நல்வார்த்தை தட்டாதே-முட்டும்
எருதுபோல் நீசண்டைக் கிடுப்புக்கட்டாதே (மதி)

தேகமுஞ்சீவனும் போலே-கொண்ட
மாகணவனுடன் வாழ்வதுமேலே (மதி)

செய்தநன்றி மறவாதே-பர்த்தா
வைதாலுமடித்தாலும் வாய்திறவாதே (மதி)

கணவனுன்மேற்பகை மூர்க்கம்-செய்யில்
குணமாகப்பேசிக் குலாவுதல் மார்க்கம் (மதி)

அருந்துணைவன்றனைத் தூண்டு-அவன்
திருந்தும்படி தினம் தேவனை வேண்டு (மதி)

---

* பெண்மதிமாலை.

| | | |
|---|---|---|
| மாமிமேல் வர்மங் | காட்டாதே-உன்றன் | |
| சாமிக்கு மாமிக்குஞ் | சண்டைமூட்டாதே | (மதி) |
| தலைவனெஞ்சைக் | கரைக்காதே-மாமி | |
| தலைமேலே நீமிள | காயரைக்காதே | (மதி) |
| நாத்திமேற்கட்சி | கட்டாதே-வெகு | |
| க்ஷாத்திரமாயவள் | தலையைவெட்டாதே | (மதி) |
| தலையணைமந்திரந் | தீது-கெட்ட | |
| கலகக்காரிகளுக்குக் | கஷ்டம்போகாது | (மதி) |
| வீட்டுக்கதிபதி | நீயே-வெளி | |
| நாட்டுக்கதிபதியுன் | னாயகன் சேயே. | (மதி) |